88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ.2/=

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. தல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு பங்குனி மீ 9 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 10 (22-03-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:9

# குடாநாட்டின் 3 பகுதிகளில் 'ஷெல்' தாக்குதல்

## குழந்தை, மாணவி பலி!

### சுமார் 30 பேர் காயம்; வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாண நகரம், நாவற்குழி-அரியாலை, ஊர்காவற்றுறை ஆகிய மூன்று பகுதிகளில் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது நேற்று 'மோட்டோ ஷெல்' தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவற்றில் ஒரு குழந்தையும், மாணவியும் மரணமானார்கள். சுமார் முப்பது பேர்வரை காயமடைந்தார்கள். சில வீடுகளும் தீக்கிரையாகின.

நேற்று யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பச்சிளம் பாலகன் ஒருவனும் இளம் பெண் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

நான்கு வீடுகளும் கார் ஒன்றும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நேற்று யாழ். கோட்டையில் இருந்து வெளியேறிய சிறுடையினர் பண்ணை மீன் சந்தைக்கு அருகிலும் பாலத்திற்கு அருகிலும் வந்து நின்றனர்.

காலை 8.00 மணி முதல் நண்பகல் 2.00 மணி வரை அப்பகுதியில் நடமாடிய அவர்கள், பண்ணை வீதியூடாக செல்லும் சகல வாகனங்களையும் சோதனையிட்டனர்.

பிற்பகல் இரண்டு மணி (8ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையிலும்

நல்லூர், மார்ச் 22

நாவற்குழியில் இருந்து நேற்று 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஒரு குழந்தை உட்பட ஐந்து பேர் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நேற்றுக் காலை 9.45 மணியளவில் நாவற்குழியில் இருந்து சிருடையினர் வெளியே வர முயற்சித்ததாகச் சொல்லப்படுகிறது.

அவர்களை எதிர்த்து போராளிகள் கைக்குண்டுகளை வீசினர்.

அப்பொழுது நாவற்குழி முகாமில் இருந்து ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன. அவற்றில், அரியாலை மாம்பழம் சந்தியில் ஒன்றும், அங்குள்ள ஒரு வீட்டிலும் வீழ்ந்து வெடித்துச் சிதறின.

இதனால் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். (8ஆம் பக்கம் பார்க்க)

## காவலூரிலும்

நல்லூர், மார்ச் 22

நேற்று ஊர்காவற்றுறையிலும் பீரங்கித் தாக்குதலகள் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஐந்து பேர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

நேற்று காலை 4 மணி அளவில் ஊர்காவற்றுறைக் கோட்டை கடற்படை முகாமில் இருந்து ஐந்து கடற்படை வள்ளங்களில் வந்த கடற்படையினர் ஊர்காவற்றுறைக் கரையோரப் பகுதிகளை முற்றுகையிட் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கான ரயில் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்-கொழும்பு ரயில் சேவை மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

ஒன்றுவிட்ட ஒரு நாள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் ரயில் சேவை நடைபெறும்.

இன்று காலை 5.50 மணிக்கு மருதானையை விட்டுப் புறப்படும். யாழ் தேவி ரயில் பிற்பகல் 2.15 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு உத்தரதேவி ரயில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மருதானையை மாலை 5.50க்கு அடையும்.

கொழும்புக்குப் போகும் பிரயாணிகள் மதவாச்சியில் இறங்கி அங்கிருந்து மற்றொரு ரயிலில் கொழும்பு நோக்கிச் செல்வர்.

மறு அறிவித்தல்வரை ரயில் சேவை இந்த ரீதியில் ஒன்றுவிட்ட ஒரு தினங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது

## யாழ்ப்பாணம் ஏரிப் பகுதியில் மீன்பிடித் தடை நீக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாண ஏரிப் பிரதேசத்தில் மார்ச் 20 இல் இருந்து மீன் பிடிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இது சம்பந்தமான கடிதம் பாதுகாப்பு அமைச்சச் செயலாளரிடம் இருந்து யாழ் அரச அதிபருக்குக் கிடைத்துள்ளது.

மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்ட 85,000க்கு மேற்பட்ட பொதுமக்களின் நிலையை யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் அரசுக்கு எடுத்துரைத்ததைத் தொடர்ந்தே யாழ் ஏரியில் மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ஏரி (Jaffna Lagoon) என்று கூறப்படும் பிரதேசம் வருமாறு:-

பூநகரி கல்முனையில் இருந்து ஆரம்பமாகி சங்குப்பிட்டி, நல்லூர் தென்கிழக்கே உள்ள சுண்டிக்குளம் வரையிலும்-

கிழக்குப் பக்கமாக ஆனையிறவு, ஊர்வணி சுன்பற்று, தம்மன்கேணி, ஆழியவளை, கிளாலி, கச்சாய், கேரதீவு, மறவன்புலவு, அரியாலை இவற்றை அடுத்த உப்பு நீர்த்தேக்கப் பிரதேசமாகும்

## இந்தியாவிலும், வடக்கிலும் ஆயுதப் பயிற்சி பெற்றோர் மலையகத்தில் பதுங்கல்

### நாடாளுமன்றத்தில் எம்.பி.

கொழும்பு, மார்ச் 22

வடக்கிலும் இந்தியாவிலும் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் மலையகத்திலும் பதுங்கியிருக்கின்றார்கள்.

அவர்களை வளைத்துப் பிடிக்க அரசு ஏன் தயங்குகின்றது?

அமைச்சர் தொண்டமான் மீண்டும் பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்துவிடுவார் என்ற பயமா?

இப்படிக் கேட்டார் கொத்மலை எம். பி. ஆனந்த தஸநாயக்கா.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தில் பங்குபற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு (8ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை: புத்தர் வழியில் தீர்க்காவிடில் மீளமுடியாத சிக்கல் வரும்

### இந்திய மந்திரி எச்சரிக்கிறார்

கொழும்பு, மார்ச் 22

புத்தர் காட்டிய வழியிலே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு முன்வரவேண்டும்.

இல்லையேல் மீள முடியாத சிக்கலில் இலங்கைத் தீவு சிக்கிக்கொள்ள நேரிடும்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் இந்திய நாடாளுமன்றத்தில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

வெளியுறவுக்கொள்கை பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இணை அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

அரசியல் அணுகுமுறை மூலமும் புத்தர் காட்டிய வழி முறைகள் மூலமும் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசு தீர்வு காணும் என்று பாரதம் நம்புகிறது.

அப்படித் தீர்க்க முன்வராவிடில் மீளமுடியாத சிக்கலில் இலங்கைத் தீவு சிக்கிக் கொள்ளும்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு பாரதம் ஆற்றக்கூடிய பணிஒன்று உண்டு அதைத்தான் இந்தியா செய்துகொண்டு இருக்கிறது.

ஆனால் முடிவில்லாமல் அதைச் செய்து கொண்டு இருக்க முடியாது.

இலங்கை நிலையை பயனுள்ள வகையில் சமாளிப்பதுபற்றி இந்தியா ஏனைய உலகநாடுகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றது.

ஆனால் இதுபற்றி எல்லாம் இந்தியா தம்பட்டம் அடித்துக் கொள்ள (8-ஆம் பக்கம் பார்க்க)

### பண்டிதமணி

அமரர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஐயா பற்றி அவரது மூத்த மாணவர்களின் ஒருவரான பிரபல எழுத்தாளர் க. சி. குலரத்தினம் எழுதும் தொடர்கட்டுரையை மூன்றும் பக்கத்தில் படியுங்கள்.

### சுபநேரம்

22- 3- 1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.17 முதல் 4 47 வரை
ராகுகாலம்:
9.17 முதல் 10.47 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்
யோகர் சுவாமி குருபூசை

## வானத் தாக்குதல் திங்களன்று முடிவு

### அத்துலத் தகவல்

கொழும்பு, மார்ச் 22

வானத் தாக்குதல் இடைநிறுத்தத்தை தொடர்வதா அல்லது ரத்துச் செய்வதா என்பது குறித்து திங்கட்கிழமை முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

இது சம்பந்தமாக திரு அத்துலத் முதலி மேலும் தெரிவித்ததாவது:-

விமானத் தாக்குதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த காலத்தில் போராளிகள் தரப்பில் இருந்து ஒத்துழைப்பே கிடைக்கவில்லை.

இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த வானத் தாக்குதலை மீண்டும் தொடருவதா? இல்லையா? என்பது பற்றி அரசாங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை முடிவு செய்யும் என்றார்.

அரசின் அழைப்பை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து இலங்கை தமிழ் அகதிகள் திரும்பி வருவதில் முன்னேற்றம் தெரிகிறதா என்று அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

கடந்த ஒரு வார காலத்தில் சுமார் 25 தமிழ் அகதிகளே தமிழ் நாட்டில் இருந்து திரும்பி வந்தனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

## கருத்துக் கலசம்

— மதுரா

புத்தர் மகா அவதார புருஷர். கிருஷ்ண பரமாத்மாவின் மறு அவதாரங்களில் ஒருவர் எனக் கருதப்படுபவர்.

அவர் பஞ்சசீலக் கதாநாயகர். அன்பையும் அஹிம்சையையும் தமது போதனைகளில் வலியுறுத்தியவர்.

புத்தர் இந்தியாவில் தோன்றியவர். எனினும் அவரது கொள்கைகளை, கோட்பாடுகளை உள்ளடக்கிய மதம் இலங்கை, பர்மா, தாய்லாந்து போன்ற பிற நாடுகளில் வேரூன்றித் தழைத்து உள்ளது.

இலங்கையில் புத்த மதம் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னரே காலூன்றியதாகச் சரித்திரம் கூறும்.

அதனைப் பெருமையாகப் பேசிக்கொள்ளும் இந்நாட்டுப் பெரும்பான்மை இனத் தலைவர்களும், கல்விமான்களும் பலர்.

புத்தரின் பெருமை, அவரது கோட்பாடுகள், சிந்தனைகள், அறநெறிகள் ஆகியவற்றின் மகிமை என்பன மனிதநேயத்துக்கு உரியன.

ஆனால் அவரின்நெறிகளை மக்கள் கடைப்பிடித்து வாழ்கிறார்களா என்பது சந்தேகமே.

புத்தர் பெருமானினது போதனைகளை மட்டுமன்றி ஏனைய மத நாயகர்களின் போதனைகளையும் உலக மக்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பது கேள்விக்குறிதான்.

புத்தர், யேசு, முகம்மதுநபி, காந்திமகான் ஆகியோரினதும் ஏனைய பல தவ முனிவர்களினதும், நற்கோட்பாடுகளை உலக மக்கள் கைக்கொண்டால் மனித இனம் இன்னற்படத் தேவையில்லை. மனித குலத்தின் பலதுன்ப, துயரங்கள் தீர்ந்து விடும்.

இதனை இலங்கை அரசாங்கம் உட்பட ஏனைய உலக நாடுகளும் அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொள்வது அவசியம்.

அப்போதுதான் உலகில் சமாதானமும் அமைதியும் நிலவ ஏதுவாகும்.

இதனை அடிப்படையாக வைத்தே இந்திய வெளியுறவு இணை அமைச்சர், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் புத்தர் வழியைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்க வேண்டும்.

இனியாவது இலங்கையின் தர்மிஷ்ட அரசு புத்த தர்மநெறி பற்றிச் சிந்திக்குமோ என்னவோ!

## கூட்டணி யோசனை: பல உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன

### சிவா பேட்டி

சென்னை, மார்ச் 21

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு மொழி மாநில யோசனையை இந்தியா உட்படப் பல உலக நாடுகள் நியாயமானவை என்று ஏற்றுக்கொண்டு உள்ளன.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் இலங்கைக்கு விடப்பட்ட சவாலாகும்.

இந்தச் சவாலை ஏற்று கூட்டணியின் மாற்று யோசனைகளை அமுல் நடத்த இலங்கை முன்வரவேண்டும்.

கூட்டணியின் மாற்று யோசனையில் தீர்வு காணப்படுவதைப் பெரும்பான்மைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வர்.

கூட்டணியின் மாற்று யோசனைச் சவாலை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாமல் போலிக் காரணங்களின் பின்னால் பதுங்கிக் கொள்ளுமா?

இப்படி திரு. சிவசிதம்பரம் 'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

## யாழ். ஆஸ்பத்திரி வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது

நல்லூர், மார்ச். 22

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்த இரண்டு சடலங்கள் இனந்தெரியாதோரால் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டன.

இதனைத் தடுக்க ஆஸ்பத்திரி சிற்றூழியர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து ஊழியர்கள் வேலைசெய்ய மறுப்புத் தெரிவித்தனர்.

நேற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்த இரண்டு பேரின் சடலங்களை இனந்தெரியாத இளைஞர் குழுவொன்று கடத்த முற்பட்டது.

அப்பொழுது ஆஸ்பத்திரிசிற்றூழியர் ஒருவர் இளைஞர்களின் தாக்குதலுக்குள்ளாகி வாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று ஊழியர்கள், தாதிமார்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்க முற்பட்டனர்.

பின்னர் வைத்திய அத்தியட்சகரின் வேண்டுகோளுக்கிணங்கவும், காயமடைந்த நோயாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் இவ்வேலை நிறுத்த முயற்சி கைவிடப்பட்டது.

பிந்திய செய்தி:

ஆஸ்பத்திரியில் இருந்துகடத்தப்பட்ட இரு சடலங்களும் இரண்டுமணித்தியால நேரத்தில் மீண்டும் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இளைஞர் கோஷ்டிகள் எடுத்த முயற்சியின்பலனே இதுஎனத் தெரியவந்தது.

## புதுக்குடியிருப்பில் ஏழு பேர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 22

முல்லைத்தீவுப் பகுதியில் புதுக்குடியிருப்புக் கிராமத்தில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தேடுதலில் ருறைந்தது ஏழு பேர் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கி மரணமானார்கள் என்று அறியப்படுகிறது.

இறந்தவர்களில் இரண்டு பேர் பெண்கள்.

நேற்று அதிகாலை கறுப்புச் சீருடையினர் கவச வாகனங்களிலும் நடந்தும் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சுற்றி வளைத்தனர். வீடுவீடாகப் புகுந்து தேடுதல் நடத்தினர்.

அந்த நேரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் தாராளமாகத் தீர்க்கப்பட்டனவாம்.

வீடுகளினுள் இருந்தவர்கள் வெளியே அழைக்கப்பட்டும் சோதனையிடப்பட்டனராம்.

அச்சமயத்தில் துப்பாக்கிச் சூடுகள் தாக்கி 7 கிராமவாசிகள் மரணமானார்கள்.

பின்னர் வீடுகள் சூறையாடப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

## வழிபடச் சென்ற வயோதிபர் உயிரை குடித்தது வேட்டு!

பலாலி, மார்ச். 22

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலுக்கு வழிபடச் சென்ற வயோதிபர் ஒருவர் நேற்று ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலையில் தொண்டமானாறு இராணுவ முகாமில் தரையிறங்க வந்த ஹெலிக்கொப்டர் ஒன்றின் மீது ரொக்கெட் லோஞ்சரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஹெலிக்கொப்டர் தரையிறங்காமல் மேலெழுந்தது. உயரத்தில் பறந்த ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுக்கள் அடுத்தடுத்து தீர்க்கப்பட்டன.

வேட்டுக்கு இலக்காகி 65 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தசாரதியை பண்டாரி வந்து படி இறக்கினரா?

இந்திய அரசியல் வானில் மீண்டும் பார்த்தசாரதி- இப்படிச் செய்திகள் வெளிவரத் தொடங்கி உள்ளன.

இலங்கைப் பிரச்சினையில் இருந்து திரு. பார்த்தசாரதி ஒதுக்கி வைக்கப்பட்டார் என்பது கடந்த ஆண்டு வந்த செய்தி.

அவர் ராஜினாமாச் செய்து விட்டார் என்பது 1986 பெப்ரவரியில் வெளிவந்த செய்தி. திரு. பார்த்தசாரதிக்கு மீண்டும் முக்கியத்துவம் அளிக்கப் படத் தொடங்கியுள்ளது. புதுப்பதவி கிடைக்கப் போகிறது - இப்படி எல்லாம் செய்திகள் வருகின்றன.

இந்த நிலையில் திரு. பார்த்தசாரதியின் ராஜினாமா பற்றிய பின்னணித் தகவல்களை அறிவது பொருத்தமாக இருக்கும் அல்லவா!

'பார்த்தசாரதி ராஜினாமாக் கதை' என்ற தலைப்பில் மார்ச் 15 இல் 'இன்டியா ருடே' சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.

கட்டுரையை எழுதியவர்: டிலிப் பொப்.

பிரஞ்சு படுக்கை அறைக் கோமாளித்தனம், கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் பாசாங்குத்தனம் நிறைந்தது.

அந்தத் தொனி பிரதமர் ராஜீவ் காந்தியின் அண்மைக்கால நடவடிக்கைகளில் பிரதிபலித்துள்ளது என்று சொன்னால், அதில் ஓரளவு நியாயப்படுத்தும் அம்சங்கள் உள்ளதும் தெரிகிறது

நாட்டின் நடப்பு விவகாரத்தில் ஆகக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகச் சுட்டிக்காட்டப்படுவது திரு. கோபாலசுவாமி பார்த்தசாரதியின் எதிர்காலம் பற்றிய குழப்ப நிலையே.

## 'சாரதி'யின் ராஜினாமாவும் அவர் ஒதுக்கப்பட்ட விதமும்

மெதுவாகப் பேசும் பழம்பெரும் ராஜதந்திரி திரு. பார்த்தசாரதி.

எதிரியும் நண்பனும் அவரை 'ஜிபி' என்றே அழைப்பர் பத்திரிகை பிரபலத்தை அறவே விரும்பாதவர்.

ஆனால் கடந்த 2 வாரங்களாக தேசிய தினசரிப் பத்திரிகைகளின் முன் பக்கச் செய்தியாக அவர் விளங்கினர்.

இதற்கெல்லாம் காரணம் ஒரு ஏஜன்சிச் செய்தி தான்.

திரு. பார்த்தசாரதி ராஜினாமாச் செய்து விட்டார் — இது யு என் ஐ. செய்தி.

போட்டி செய்தி ஸ்தாபனமான பி.ரி ஐ. மூலம் அரசு மறுப்பு விடுத்தது அவசரமாக அந்த மறுப்பை வெளியிட்டு இக்கட்டில் இருந்து கழற்றிக் கொள்ள அரசு முயற்சித்தது.

வழமையான இரட்டை நாக்குக் கொண்ட அதிகார வர்க்கம் விடுத்த மறுப்பு,ராஜினாமாச் செய்தியை உறுதிப்படுத்துவதாகவே அமைந்து விட்டது.

'அதிகார வட்டாரம் சொன்னது' என்ற வழமையான பாணியில் பி.ரி ஐ. மறுப்பை வெளியிடவில்லை.

'அதிகார வட்டாரங்களின் படி' என்று கூறியே பி.ரி ஐ மறுப்பை வெளியிட்டது, பிரச்சினை இன்னும் கேள்விக்குறியில் இருந்ததைக் காட்டியது

அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் பின்னர் 'செய்தி ஒரு ஊகமே' என்று சொன்னர். இது உண்மையாக இருக்காதா என்று உத்தியோக தோரணையைத் தான் இது காட்டியது.

திட்டவட்டமான ஆதாரத்துடன் கூடியது தான் பார்த்தசாரதி ராஜினாமாச் செய்து விட்டார் என்ற யு என் ஐ. செய்தி. இப்படி 'இன்டியா ருடே'க்குத் தெரிய வந்துள்ளது.

பெப்ரவரியில்

பெப்ரவரி 11 அளவில் திரு. பார்த்தசாரதி தனது ராஜினாமாக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்தார்.

அந்த ஒரு பக்கக் கடிதம் பண்பான முறையில் எழுதப்பட்டிருந்தது. தனது கடமையில் இருந்து தன்னை விடுவிக்கும்படி திரு. பார்த்தசாரதி கடிதத்தில் கேட்டிருந்தார் முக்கிய பந்தி வருமாறு;

"அன்னை இந்திரா காந்தியின் துக்ககரமான மறைவின் பின்னர் நான் தற்காலிகமாக நியமிக்கப் பட்டேன். எனது சேவைகள் நிறுத்தப்படவேண்டிய காலம் வந்து விட்டது என்று நான் உணருகின்றேன். எப்படி இருப்பினும் எனது சேவைகள் தேவைப்படும் சமயம் நீங்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம்'' இப்படி திரு. பார்த்தசாரதியின் ராஜினாமாக் கடிதம் அமைந்தது.

இக்கட்டத்தில் அவரின் சேவைகள் அரசுக்குத் தேவைப்பட்டன.

அரசாங்கத்தை இடுகிடுக்க வைக்கும் பல பிரச்சினைகள் ஓயும் வரையும் அவரின் ராஜினாமாவைத் தாமதப்படுத்துவதே அரசின் அந்தத் தேவை

யு.என் ஐ. செய்தி பிரசுரமானதும் திரு பார்த்தசாரதி திருவனந்தபுரம் சென்று விட்டார். இச்செய்தி பற்றி கருத்து வெளியிடுவதைத் தவிர்த்து ஒதுங்கிக்கொள்ளுபவே அவரின் திருவனந்தபுர விஜயம்.

இப்பிரச்சினையை மூடி மறைக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட விளக்கமற்ற முயற்சிகளே அவரது ராஜினாமாவுக்கு உண்மையான காரணங்கள்.

செயற்பாடில்லாத வால்

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக மதிப்பில்லாத, செயல்பாடற்ற ஒருவாலாகவே கொள்கை வகுக்கும் குழு வெளிநாட்டமைச்சில் இருந்து வந்துள்ளது. – இது பார்த்தசாரதியின் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கொள்கை வகுக்கும் குழுவின் தலைவராக இருக்கும் திரு. பார்த்தசாரதிக்கு அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. அண்மைக்காலத்தில் வெளிநாட்டு கொள்கை விவகாரங்கள் குறித்து இவர் எட்டாத் தொலைவிலேயே வைக்கப்பட்டு வந்தார். கடந்த 4 மாதங்களில் ஒருமுறையாவது திரு. பார்த்தசாரதி, பிரதமரைச் சந்திக்கவே இல்லை

இலங்கை விஷயத்தில் திரு. பார்த்தசாரதி நிபுணத்துவம் மிக்கவர் அப்படி இருக்கும் இலங்கை விஷயம் உட்பட முக்கிய வெளிநாட்டு விவகாரங்கள் குறித்து அவருக்கு அறிவிக்கப்படுவதில்லை என்பது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்

திரு. ரொமேஷ் பண்டாரியின் கொழும்பு விஜயம் ரத்துச் செய்யப்பட்டதை பத்திரிகை மூலம் தான் திரு.பார்த்தசாரதி அறிந்தார். இது

(7 ஆம் பக்கம் பார்க்க)

# முதலீட்டு வட்டிகளுக்கு புதிய வரி விதிப்பு முறை

சகல நிலையான வைப்புகளிலிருந்தும் பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து ஏப்ரல் முதலாம் திகதி முதல் 20 சதவீதம் வரி கழிக்கப்படும் என்ற அண்மைய பத்திரிகை அறிவித்தல் சிறிய, நடுத்தர முதலீட்டாளர் மத்தியில் பல சந்தேகங்களையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்த யோசனையானது நிதிமந்திரியின் 1985 வரவு செலவுத் திட்ட உரையின்போது பாரிய வரி நழுவலை (Evasion) தடைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சியின் ஓர் அங்கமாக வெளியிடப்பட்டது.

எழுந்தமானமாகப் பார்க்கும்போது இலங்கை வரிஅமைப்பில் இது ஓர் புதுமுறையாகத் தென்பட்டாலும் உண்மையில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஓர் தத்துவத்தின் நீடிப்பேயாகும். அதாவது பங்குலாப வரி கழிப்புமாகும்.

இதுவரை பங்குலாப வருமானத்திலிருந்து வரி கழிப்பு எப்படி நடைபெறுகின்றது என்பதை முதலில் கவனிப்போம்.

கம்பனிகள் தங்கள் லாபத்திலிருந்து பங்குதாரர்களுக்கு பங்குலாபம் பிரகடனப்படுத்தியவுடனேயே பங்குலாப வரியாக 20 சத வீதத்தைக் கட்டாய கழிவாகக் கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டிய கடப்பாடு இருந்து வருகின்றது.

பங்குதாரர் வருமான வரி கட்டுபவராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இக்கழிவு சகலருக்கும் கிடைக்கும் பங்கு லாபத்திலிருந்து கழிக்கப்பட்டு வருகின்றது

உண்மையில் சிலநூறு ரூபாய்களை மட்டுமே பங்கு லாபமாகப் பெறும் அநேகர், வரியிறுப்பாளர் அல்லாத காரணத்தினால் (27,000 ரூபாவிற்கும் குறைவாக வருட வருமானம் பெறுவோரிஸ்) தங்கள் மீளளிப்பிற்காக வருமானவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துக் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

வரியிறுப்பாளராக உள்ள ஏனையோர் தங்கள் மொத்த வருமானத்திலிருந்துஎழும் வரியிலிருந்து முன்னதாகவே செலுத்தப்பட்ட பங்குலாப வரியைக் கழித்த பின் மிகுதியைஅவ்வாண்டுக்குரிய வரியாகக்கட்டுகின்றார்கள்.

மேற்படி வரிகழிக்கும் முறையை வரிநழுவலைத் தடுக்கும் ஓர்படியாக நிதி மந்திரி இந்த வரி ஆண்டு தொடக்கம் வட்டி வருமானத்திற்கும் புதிதாக விதித்திருக்கிறார்.

வரிஒப்புதல் (Compliance) மிகுந்து காணப்படும் பிரித்தானியா ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே வட்டியிலிருந்து வரிகழிக்கப்படும் இம்முறை பல ஆண்டுகளுக்குமுன்னர் அறிமுகப் படுத்தப்பட்டு விட்டது.

இலங்கையில்நிலையான வைப்புகளிலிருந்து முடங்கியிருக்கும் பணத்தின் அளவு 3 ஆயிரம் கோடிரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது

எனினும் அம்முதலீட்டால் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு வரி விதிக்கும் முறை திருப்திகரமாக இருப்பதாகத் தெரியவில்லை.

அதேநேரம் நிலையான வைப்புக்கள் வைத்திருக்கும் முதலீட்டாளர்களோடு பங்கு லாபம் பெறுவோரை ஒப்பிட்டுப் பார்க்கும்போதுமுன்னைய வர்க்கத்தினர் பல மடங்கு விஞ்சியுள்ளவர்களாகத் தெரிகின்றது.

எனவே இவ்வரி கழிப்பு முறையை பாகுபாடற்ற வகையில் யாவருக்கும் பொதுவாகப் பிரயோகித்தால் ஆக்கபூர்வமற்ற

ந. கருணை ஆனந்தன்
முன்னைநாள் சிரேஷ்ட வரிமதிப்பாளர், வருமான வரி ஆலோசகர்.

இடர்ப்பாடுகளும்தேவையற்ற செலவினங்களுமே சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஏற்படும் சந்தர்ப்பம் உருவாகும்

முதலீடு செய்யும் பொதுமக்கள் வங்கிகள், நிதிநிறுவனங்கள், உள்நாட்டுஇறைவரித் திணைக்களம் ஆகியவை இதனால் பெருஞ் சிக்கலை எதிர்நோக்கும்.

இதன் காரணமாகவே நிதிமந்திரி அவர்கள் இம்முறையை வளைந்து கொடுக்கக்கூடிய வகையில் அமுல்ப்படுத்தவேண்டும் என்ற தொனியில் தனது உரையை நிகழ்த்தியிருக்கிறார்.

அவர் கூற்றுப்படி நிலையான வைப்புச் செய்யும் ஒவ்வொருவரும், ஏற்கனவே முதலீடு செய்தவர்களும் பின்வரும் விபரங்களைத் தத்தமது வங்கிக்கோ நிதிநிறுவனத்திற்கோ தாமாகவே உரையாய் வெளிப்படுத்தவேண்டும்.

1 பெயருக்விலாசமும்
2. தேசிய அடையாள அட்டை இலக்கம்
3 வரியிறுப்பாளரா, வரியிறுப்பாளர் அல்லாதவரா:-
4 வருமான வரிக் கோவை இலக்கம்; ஏதாவது இருப்பின்:
5. வைப்புஇலக்கம்:-

மேலும் அவர் தான் ஒரு முதலீட்டாளர். ஆனால் வரியிறுப்பாளர் அல்ல என வெளிப்படுத்துவாராயின் அவருடைய வட்டியிலிருந்து வரிக்கழிவு செய்யவேண்டிய அவசியமில்லை என்று வங்கிக்கோ, நிதி நிறுவனத்திற்கோ அறிவுறுத்தல் வழங்கப்படும் என்று நிதி மந்திரி கூறியுள்ளார்.

இப்படிச் செய்வதனால் குறைந்த வருமானம் உடையவர்கள் தமது வட்டியிலிருந்து கழித்த வரியின் மீளளிப்பிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பித்து காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழாது.

ஆதே நேரம் இந்த உறுதிப்பாட்டை ஓர் முதலீட்டாளர் குறித்த தவணைக்கு முன் வெளிப்படுத்தத் தவறினால் அவர் வரியிறுப்பாளர் அல்லாவிட்டாலும் அவரது வட்டி வருமானத்திலிருந்து வரிக்கழிவை ஏற்படுத்தி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வங்கியோ,நிதிநிறுவனமோ அனுப்ப வேண்டும் என்று அண்மையில் இறைவரி ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்.

எனவே ஒவ்வொரு முதலீட்டாளரும் தத்தம் நலன் கருதி இவ்வுறுதி உரையை தமது வங்கிக்கோ, நிதிநிறுவனத்திற்கோ ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்புவாராயின் பல பின் விளைவுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

ஏப்ரல் முதலில் – அதாவது 31.3 87 இன் பின் வங்கிகளோ, நிதி நிறுவனங்களோ தமது

(7–ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய அறிவிப்பு

மேற்படி வரிகழிப்பு முறையில் சில திருத்தங்கள் நிதி மந்திரியால் வெளியிடப்பட்டன. அவையாவன:-

1) பின்வரும் வைப்புக்களுக்கு இவ்வரிகழிப்பு முறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

- சகல தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிலுள்ள வைப்புக்கள்
- ஏனைய வங்கிகளிலுள்ள சேமிப்பு கணக்குகளில் ரூபா 10,000 கும் மேற்படாத தொகையுடைய வைப்புக்கள்.
- வங்கி / நிதி நிறுவனங்களிலுள்ள ஏனைய நிலையான வைப்புக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 20,000 கும் மேற்படாத தொகைக்கும்.
- விசேட இளம் பிராயத்தினர் கணக்குகள்.

முதிர்ச்சியில் 15சதவீத வரிக்கு உற்படுத்தப்பட்டவை எனவே மேற்குறிப்பிட்ட வைப்பாளர்கள் தங்கள் வங்கி / நிதி நிறுவனங்களுக்கு குறித்த உறுதி உரை வெளிப்படுத்த வேண்டிய அவசியமேற்படாதென்றே கொள்ளவேண்டும்.

2) மீளளிப்பு:-

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பம் கிடைத்த மூன்றுமாதத்துக்குள்மீளளிப்பு செய்தாக வேண்டும். அன்றேல் குறிப்பிட்ட உத்தியோகத்தர் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

# 'சோதனைமேல் சோதனை போதுமடா சாமி....'

1986 மார்ச் நான்காம் திகதி மாலை 3 – 30 மணிக்கு எமது கிராமத் தொண்டன் ஒருவன் ஒரு தகவலைச் சொல்கிறன். எமது அயல் கிராமங்களான கணேசபுரம்–கன்னாட்டி ஆலங்குளம் ஆகியவற்றின் மக்கள் இராணுவத் தாக்குதல் களினால் அகதிகளாக்கப் பட்டு எமது கிராமத்தை நோக்கி வருவதாக தகவல் கிடைக்கிறது

எமது கிராமம் மிகவும் சிறிய கிராமம். 82 குடும்பங்கள் உள்ளடக்கப் பட்ட பின்தங்கிய கிராமம். அதிலும் இன்றைய நிலை பரிதாபகரமானது.

இந்நிலையில் அகதிகளாக வரும் மக்களை ஏற்

## சின்னஞ்சிறிய சின்னப் பண்டிவிரிச்சானில் பென்னம் பெரிய அகதி முகாம்

றுக் கொண்டு உணவு – உடை தங்குமிடம் மருந்து இவைகளை எப்படி நிவிர்த்தி செய்ய முடியும் என்பதை சிந்திக்க முடியாத நிலை. தொண்டர் குழு கூடி கிராம மக்களிடமிருந்து உணவுப் பொதிகளைப் பெற்று அகதிகளுக்கு உதவும் பணி அவசரமாக மேற்கொள்ளப்படுகிறது.

மாலை 4 – 30 மணிக்கு அகதிகளின் ஒரு கூட்டம் எமது கிராமத்தின் தென் திசையில் வந்திருப்பதாக தகவல் வருகிறது. பெண்களும் குழந்தைகளும் காடுகளில் பதுங்கி இருப்பதாகவும், முதலில் உணவு தான் தேவை என்று சொன்னவுடன் தொண்டர்கள் உணவுப் பொட்டலங்களைக் கொண்டு வருகிறார்கள். இவ்வளவு விரைவில் எப்படி உணவு கிடைத்தது என்று ஆச்சரியப்படும் அளவுக்கு உணவு வந்தது இரவுக்காக வைத்திருந்த உணவுகளை மக்கள் வழங்கியதாக தொண்டர்கள் கூறுகிறார்கள். மக்கள் மீண்டும் அகதிகளுக்கு உதவுவதற்கு உணவு சமைத்தார்கள். என்றுமே காணாத சோக நிகழ்வுகள் இங்கு நடப்பது இதயத்தைப் பிழிந்துவிடக்கூடியவை.

இரவு இரவாக அகதிகள் கூட்டம் வந்துகொண்டிருக்க பாடசாலைக் கட்டடம் அவர்களை உள்ளடக்குகிறது. ஒரு புறம் தாய்க்குலத்தின் அழுகுரல். மறுபுறம் இராணுவத்தால் தாக்கப்பட்டோரின் வேதனைக் குரல். பசியால் துடிக்கும் குழந்தைகளின் அவலக்குரல்.

ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு மூடை அரிசி வேண்டும். அதற்குத் தேவையான உபபொருள்களும் வேண்டும். எமது சிறிய கிராமத்தில் பெரிய அகதி முகாமைச் சமாளிப்பது எப்படி? கிராம விதானை யாரை அணுகுகிறோம். அகதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம். என்ற சுற்றறிக்கை பற்றி அவர் பேசுகிறர். எனினும் நாம் ஆச்சரியப்படும் வகையில் உதவிகள் வந்து சேருகின்றன. இந்தஇடத்தில் மகாத்மா காந்தியின் வார்த்தையும் உண்மையாகிறது. 'இறைவனை நாம் நேரில் காணமுடியாது. அனுபவத்தால் நடவடிக்கைகளால் தான் அறிய முடியும்' என்பதையும் இந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த நாம் உணரக்கூடியதாக இருந்தது.

எம் உதயகுமார்

# கோடேறி வழக்குரைத்த ஐயனர் கோலத்தேரேறி வீதிஉலா வருகிறர்

தமிழரின் வாழ்வினை ஆராய்ந்தால் அவர்களின் வாழ்வில் கோயில் முக்கிய இடம் வகித்து வந்திருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. கோயில்கள் மக்களுக்கு ஆன்மீக பலத்தினையும் தெய்வீக உணர்வினையும் ஊட்டுவதாக மட்டுமன்றி அவர்களின் பண்பாட்டினைப் புலப்படுத்துவதாகவும் அதனை போற்றிப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் அமைந்துள்ளன. கட்டிடம், சிற்பம், ஓவி

## 'நீரே நீர்க்குமிழியே நீரும் நீரும்தான் எனக்குச் சாட்சி'

யம் ஆகிய கலைகளின் பயனாகவும் இசை, நாடகம், நடனம் ஆகிய கலைகளையும் வளர்ப்பதில் கோயில்கள் உயர்ந்து நின்றன. கோயில்கள் வளர்த்த கலைகளையே நாம்'கோயிற் கலைகள்' என்கிறோம்.

உலகின் ஜீவநாடியாக விளங்குகின்றவன் இறைவன். ஆங்கிலத்தில் மதம் (RELIGION) என்ற சொல்லுக்கு திரும்பக் கொணர்தல் என்று பொருளாகும். எல்லா மதங்களும் எல்லா ஜீவன்களும் எந்த ஒரு பிரமத்திலிருந்து தோற்றுவிக்கப் பட்டதோ அதையே மீண்டும் சென்றடையும். வடமொழியில் மதம் என்னும் சொல்லிற்கு இழுததுச் செல்வது என்பது கருத்தாகும். எனவே தான் இறைவனிடம் தம்மை இழுத்துச் செல்வதற்கு மதத்தினை மக்கள் பின்பற்றினர்.

இப்போது இலங்கையில் தென்படும் பெரிய கோயில்கள் எல்லாம் இடைக்காலத்தில் வந்தவையே. வேத காலத்தில் இவை இருந்ததில்லை. வேள்வித்தீயின் மூலம் வழிபாடு நிகழ்ந்து வந்தது. நதிக்கரைகளிலும் மரச்சோலைகளிலும் தெய்வ வழிபாடுகள் நிகழ்ந்தன.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு சுன்னாகத்தின் பெரும் வயல் வெளியில் உழவர்கள் உழுதுவருவது வழக்கம். ஒருநாள் மருதமரத்தடியில் தாளைக்குப் பக்கத்தில் இருந்த வயலினை உழுத உழவர்க்கு ஆச்சரியம் காத்திருந்தது. உழுது கொண்டிருந்த ஏர் ஒரு இடத்தில் நகர மறுத்தது. ஏர் நின்ற இடத்தில் இரத்தம் கசிந்தது. அந்த இடத்தினைத் தோண்டிப் பார்த்தனர். அங்கே சிலை ஒன்று இரத்தம் தலையில் தோய்ந்தபடி இருக்கக் கண்டு எடுத்தனர். நெல் வயல்கள் சூழ்ந்த அந்த மருதமரத்தின் கீழ் நிழலில், ஆல், நெல்லி, அரசு போன்ற பசுமையான மரச்சோலையும் கூடிய சூழலிலே தாளை மரங்களுடன் வைக்கப்பட்டு அந்த சிலையை மக்கள் வணங்கினர். 'ஸ்ரீ தாளையடி ஐயனர்' என்ற பெயருடன் புகழ் பெற்று விட்ட ஆலயத் தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வெள்ளமாக நிறைந்து அவன் அருள் வேண்டி நிற்பர்.

ஐயனரின் புதுமைக்குச் சான்றாக அவர் கோடேறி வழக்குரைத்த கதையை பக்தர்கள் இன்னும் நினைவுபடுத்திக் கூறுவதைக் கேட்கலாம் சுவை மிகுந்த அந்தச் சம்பவம் உண்மையானது என நம்பப்பட்டு வருகிறது.

சுன்னாகம் தாளையடி ஐயனர் தேர்த்திருவிழா வரும் திங்களன்று கோலாகலமாக நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கோயிலுக்கு முன்புள்ள வரம்பொன்றினைக் கட்டிக்கொண்டிருந்த மச்சானும் மச்சானும் மழை பெய்தபோதும் கதைத்துகொண்டு வரம்பினை அமைத்துக்கொண்டிருந்தனர். கதை சூடேறி– கருத்துவேறுபாடு பலமடைந்து — தர்க்கமாக மாறி ஒருவரை ஒருவர் மண்வெட்டியால் தலையில் அடித்தபோது மற்றவர் இறந்துவிட்டார். எவருமே அருகில் இல்லாத நிலையில் ஐயனரைப் பார்த்து இறந்தவர் 'நீரே நீர்க்குமிழியே நீரும் நீரும் தான் எனக்குச் சாட்சி' என்று கூறியபடியே மரணமானர். இக்கொலையை தூரத்தில் உள்ள வண்ணன் குளத்தடியில் நின்று பார்த்த ஆடுமேய்க்கும் இடையர் மூலம் அறிந்தவர்கள் கொலைஞன்மீது வழக்கு தொடர்ந்தனராயினும் கொலையை நேரில் பார்த்த சாட்சி எவரும் இல்லாததால் வழக்கு தள்ளுப்பட இருந்தது. இறுதி நாள் வழக்கு விசாரணையில் கோட்டில் தோன்றிய 'கிழவர்' ஒருவர் தான் இக்கொலையை நேரில் கண்டதாக சாட்சியமளித்தார். மதிநுட்பம் நிறைந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சாட்சி திறமையாக பதிலளித்தார். இறந்தவர் கடைசியாக கூறிய வார்த்தைகள் பற்றி சாட்சி தெரிவிக்கையில் 'நீரே நீர்க்குமிழியே நீரும் நீரும் தான் எனக்குச் சாட்சி' என உரைத்ததாகவும் கடைசி இரு 'நீரும் நீரும்' என்ற சொற்கள் மழைத் தண்ணீரையும், ஐயனரையும் குறிக்கின்றது எனவும் குறிப்பிட்டார். நீதிபதி சாட்சியை ஏற்றுக்கொண்டார். சாட்சியைப் பாராட்டச் சென்ற மக்கள் சாட்சி மாயமாக மறைந்துவிட்டமை கண்டு ஆச்சரியப் பட்டனர். கொலைஞனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அன்றிலிருந்து கோடேறி சாட்சி சொன்ன ஐயனரின் புகழ் இலங்கை எங்கும் பரவியது பக்தர்கள் கூட்டம் கோயிலில் நிறைந்தது.

டச்சுப் பெண்மணி செல்வி மோரன் கோல்டா ஐயனர் கோயில் சரிதத்தை உலகின் பல நாடுகளுக்கும் சென்று ஆராய்ந்து இறுதியில் நான்கு மாதம் சுன்னாகம் ஐயனர் கோயிலில் கழித்தமையும் சுன்னாகம் ஐயனர் கோயிலில் உள்ள காராம் பசு வாகனம் போல மிக பொருத்தமானதும் அமைவானதுமான வாகனத்தை தான் வேறு எந்த கோயில்களிலும் காணவில்லை என்றுரைத்தமையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

ஐயனர் பெருமையை மட்டும் பேசுவதோடு நின்றுவிடாமல் ஆழமாக்காமல் விட்டுவிட்ட தெற்பைக் குளத்தைத் திருத்துவதும் கோயில் திருக்கேணியை கட்டி முடிப்பதும் அரைகுறையில் நின்றுவிட்ட இராஜகோபுரத்தை முழுமையாக்கி பூர்த்தி செய்வதும் பக்தர்கள் முன் உள்ள தலையாய பணியாகும்.

★ சபா - புஷ்பநாதன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

★ வித்துவான் க. சி. குலரத்தினம் ★

தென்ராட்சிப் பகுதியில் உள்ள மட்டுவில் என்னும் ஊர் சைவாசாரத்துக்கும் செந்தமிழ்ப் படிப்புக்கும் பெயர் பெற்றவூர். அங்கே உழுதுண்ணும் வேளாளர் நெருக்கமாகக் குடியேறியிருந்தனர் மட்டுவில் என்பது குளத்தின் பெயரால் அமைந்த பெயர். மட்டுவில் வாசிகள் மிகப் பழைய காலத்திலேயே பூநகரி, முல்லைத்தீவு முதலிய மருதநிலங்களுக்குச் சென்றேறித் தங்கள் ஊரின் பெயரை அங்கே நிலைக்கச் செய்ததும் உண்டு.

மட்டுவிலுக்குச் சந்திரபுரம் என்றும் பெயர். அங்கே சாந்தநாயகி சமேதசந்திரமௌலீசர் கோயில் கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்து நல்லூரின் தென்பாலமைந்த கைலாசநாதர் கோயிலின் மூலவர் மட்டுவிலில் பிரதிஷ்டை செய்யப்பெற்ற வரலாறும் உண்டு. அது பறங்கியர் செய்த அழிவினால் உண்டான இடமாற்றம்.

மட்டுவிலில் மருதடி விநாயகராலயமும், பன்றித்தலைச்சி அம்மன் கோயிலும், பனையடியிற் பிள்ளையார் கோயிலும் அந்தவூருக்கும் அயலூர்களுக்கும் பெருவாழ்வளித்து வந்தன. மட்டுவிலாரான கிழக்கு நாட்டவர், ஆங்கிலத்தை மிலேச்ச மொழி என்றும், அரசாங்க உத்தியோகத்தை அடிமைத் தொழிலென்றும் கருதிச் சைவாசாரத்தைக் காத்து உழவு செய்தலே உத்தமம் எனக்கருதி வாழ்ந்தனர்.

மட்டுவிலில் பெருநிலக்கிழாராக வாழ்ந்த சைவாசாரசீலர் ஆறுமுகம். அவரின் அருமைத் தப்பியார் சட்டைநாதர். சட்டைநாதர் பெரிய நாட்டாண்மைக்காரர். ஊரில் குழப்பங்கள், கலகங்களை நீதி தவறாமல் தீர்த்துவைத்த பெரியவர் அவர். நீதி மன்றங்களிலும் பார்க்க அவர் சொல்லும் தீர்ப்பே தருமந்தழுவியதும், ஜனரஞ்சகமானதுமாகும். சட்டைநாதர் அஞ்சா நெஞ்சமும், உதாரகுணமும் உள்ள ஆஜானுபாகு அவரின் தேக வனப்பை முன்னிட்டு அவ்வூரவர் பாராட்டிப் பணிந்து நிற்றல் வழக்கம்.

ஆறுமுகத்தாபிள்ளை தர்மவான், தங்கக்கம்பி, தயாளகுணமுள்ள ஆசாரசீலர். கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய சைவப் பெருநூல்களுக்கு அலங்காரமான பயன் சொல்பவர். அவரைப் பின் தொடரும் பக்தர் கூட்டம் பெரிது. அவர் கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்தில் ஒரு பாடலுக்குப் பயன் சொன்ன வேளையில் கண்ணீர் வார மெய்சிலிர்த்து மூர்ச்சித்து ஆவி பிரிந்தவர்.

ஆறுமுகத்தாரின் பெரிய தகப்பனார் கணபதிப்பிள்ளை உடையார். உடையாரின் மைந்தரே உரையாசிரியர் என்று புகழ்பெற்ற கதிரைவேற்பிள்ளை. இவரை வேற்பிள்ளை உபாத்தியாயர் எனவும் வழங்குவர். இவருக்குத் திருஞானசம்பந்தபிள்ளை, மாணிக்கவாசகர், மகாலிங்கசிவம், கந்தசுவாமி, நடராசா என மைந்தர் ஐவர் பெருங் கல்விமான்களாயிருந்தார்கள். வேற்பிள்ளை அவர்களின் மனைவி மகேசுவரி, சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் அருமைச் சகோதரியாராவர்.

ஆறுமுகத்தாபிள்ளையின் அருமை மைந்தர் சின்னத்தம்பி என்னும் செம்மல். சீராளன். மகாபிரபு. இவர் தந்தையாரிடம் புராணபடனம் பழகி இருந்தார். தம் சிறிய தகப்பனாராய உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்களிடமும் சைவத்தமிழ் நூல்கள் படித்திருந்தார். பாடல்களுக்கு நயஞ் சொல்லுவதிலும், சந்தர்ப்பங்கூறி விளக்கும் போது, பழைய புராணேதிகாசக்கதைகள் சொல்வதிலும் இவருக்குப் பெரும் பயிற்சி இருந்தது. இவரிடம் ஒரு தனியாற்றல் பீறிட்டுப் பிரவாகித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சின்னத்தம்பியார் பாரதக்கதை சொல்லும் போதும், தர்மத்தின் திருவுருவான தர்மரேயாய் விடுவர். அதனால் இவர் ஊரிற் பெற்ற பெயர் தருமர். இவர் பாடுபட்டு விதைத்து, அறுவடை செய்து, சூடு மிதித்துக் களத்தில் விட்டுப் போன நெற்குவியலை இரவில் எவரேனும் அள்ளிப் போனால், "போனாற் போகிறது, பொருள் போகுமிடம் புண்ணியம்" என்று தருமமே பேசுவார்.

ஊரிலுள்ள பிள்ளைகள் இவரிடம் கூட்டம் கூட்டமாக வந்து கூடிக்குந்தியிருந்து, "அப்பா ஒரு கதை சொல்லுங்கள்" என்று கேட்டால், ஒன்றுக்குப் பல கதைகள் சொல்லும் தனியாற்றல் படைத்த கதைக்கடல் இவர். கதைக்கேற்ற வண்ணம் வீரம், காதல், சோகம் என்பன வரும் போது குரலை மாற்றி அற்புதமாகக் கூறுவார்.

கதைக் கடலாய சின்னத்தம்பியார் 1890ஆம் ஆண்டளவில் அயலூரான தனங்கிளப்பு என்னும் இடத்தவரான முருகர் என்பாரின் மகள் வள்ளியம்மையைத் திருமணஞ் செய்து இல்லறம் நடத்தி வந்தார். வள்ளியம்மைக்குச் சின்னத்தம்பி என்னொரு சகோதரரும் இருந்தார். எனவேதான், பட்டுவில் சின்னத்தம்பியாருக்குத் தருமர் என்னும் பெயர் பெருமளவில் வழங்கலாயிற்று.



சின்னத்தம்பியார் வள்ளியம்மையார் இல்லற வாழ்வில் எட்டாண்டு காலம் மகப்பேறு கிடையாத போது, வள்ளியம்மையார் தமது அயலில் உள்ள விநாயகராலயத்தில் வழிபாடு செய்து வந்த பின், தமிழ் நாட்டின் சிதம்பரத்துக்கும் கப்பலேறிச் சென்று வழிபட்டு அருள் பெற்று மீண்டார்.

சிவகாமி அம்மை சிதம்பரேசன் திருவருளால் சின்னத்தம்பியாருக்கு 1899 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இருபத்தேழாம் நாளுக்குச் சமமான விகாரி ஆண்டு ஆனி மாதம் பதினைந்காம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு பதினொருமணியளவில் சதயம் இரண்டாம் பாகத்தில் ஆண்குழந்தை பிறந்தது.

பிள்ளை பிறந்த செய்தியைக் கேட்டு மகிழ்ந்த சுற்றத்தவர் பிள்ளையைச் சூழ நின்று அதன் அழகை வியந்தனர். பிள்ளை உரித்து வைத்தாற் போல, சின்னப்பேரனார் சட்டைநாதர் மாதிரியே இருக்கிறதென்றனர். தந்தையார் சின்னத்தம்பி தங்கள் தனங்கிளப்பு விநாயகப் பெருமானை நினைவு கூரும் வகையிலும், தங்கள் முன்னோரான கணபதிப்பிள்ளை உடையாரை நினைவு கூரும் வகையிலும் கணபதிப்பிள்ளை எனப் பெயரிட்டனர்.

## காவியம் நேர் ஐயா

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

காவிய பாடசாலை கல்விகற்கச் சென்ற நான்
ஓவியமாய்க். காவியம்நேர் ஐயாவை –
பாவிலோடும்
பல்நூல் வகையொன்றாய் ஒன்றிப் பணிந்த
மைந்தேன்
நல்ல சிதம்பரம் நாடு.

அன்றடுத்தே அண்ணா மலைப்பல்கலைக் கழகம்
சென்றுதில்லைக் காட்சியொடு தேர்தமிழும் –
நன்குற்றேன்
கன்னிக் குருமணிநின் கண்ணளியாம்
வாழ்த்தின் றேல்
நன்புலவன் ஆவனோ நான்.

புறப்பொருள்வெண் பாமாலைப் புத்தக
ஆய்வின்
திறனால் பொருணூல்விற் பன்னர்- விறல்மிளிர
மெய்ச்சீர் விருதளித்தாய், இஃதுபோல்
இன்புற்றே
உயர்ந்தோர் பலர்இனி யார்?

பரவெளித் தத்துவப் பாங்காய்வும் பார்த்தே
வரன்முறைக் கற்றோர்க்கும் சிந்தை-தரவுநூல்
என்றதால் இவ் ஆய்வோன் ஏற்றதோர்
சிந்தையன்காண்
என்பதில் ஏதமில்லை ஏத்து.

என்ற முறையாய் இயல்மொழி
வாழ்த்தளித்தே
நன்றே நலன்ஆட்டும் நாயகனே – இன்றேநீர்
உன்னி உருகப் பிரிந்தீர், உயர்தமிழ் யாம்
நன்றுடும் வெற்றுகிற் றும்.

நாவலர் காலக் கருத்தெல்லைக் காட்சியோனே
காவலன் காலன் கடிகயிற்றுள் – தாவ
விட்டான்
அவ்வெல்லை நின்றதம்மா; அம்முனைதான்
நீண்டிடுமேல்
ஒவ்வுமேநின் நாமத் தொனி.

# கலாசார முக்கோணம்: அரசியல் பந்தாட்டம்?

கலாசார முக்கோணத் திட்டம் முழுக்க முழுக்க அரசியல் லாபம் கருதியே ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கு நிதி உதவி வழங்கும் யுனெஸ்கோவின் விசாரணைக் குழு ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அஸாஹி செய்திச் சேவையைச் சேர்ந்த திரு. கான்ஸோ செயிட்டோ கொழும்பில் இருந்து அனுப்பிய கட்டுரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டுரை 'புரொன்ட்லைன்' இந்திய சஞ்சிகையில் வெளியாகியது.

கலாசார முக்கோணத்திட்ட வாரம் இலங்கையில் மார்ச் 15 இல் இருந்து மார்ச் 22 வரை அனுஷ்டிக்கப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2,000 ஆண்டுகளுக்கு முந்திய பௌத்த கலைப் பொருள்கள் அடங்கிய புதையல், தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான அரசியல் ஆயுதமாக இலங்கை அரசினால் பயன்படுத்தப்படுகிறது.

யுனெஸ்கோவின் நிதி உதவியுடன் கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் புதை பொருளாராய்ச்சி வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

ஜப்பானில் உள்ள 'அஸாஹி ஷிம்பன்' பத்திரிகையாளருடன் கூடிய ஐ. நா. விசாரணைக்குழு ஒன்று அண்மையில் கலாசார முக்கோணத்திட்டம் பற்றி ஆராய்ந்தது.

புதை பொருளாராய்ச்சி வேலைகளில் தேவையற்ற செலவினம், அகழ்வு சம்பந்தமான பிழையான செயல்முறைகள் பற்றிய விவரங்களை விசாரணைக் குழு கண்டுபிடித்தது.

கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான கலைப் பொருள்கள் தாறுமாறாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அனுராதபுரம் (கிமு 300 — கிபி 900), பொலனறுவ (கிபி 1,000— கிபி 1,200, கண்டி (கிபி 1500 —கிபி 1800)- ஆகிய மூன்று பௌத்த தலங்களில் 6 இடங்களில் அகழ்வு வேலைகள் நடைபெறுகின்றன.

இம் மூன்று தலங்களும் 2,000 வருட பௌத்த சரித்திரத்தையும் பௌத்த கலாசாரத்தையும் கொண்டன.

பெரியஅளவில் அகழ்வு வேலைகள் திட்டமிடப்படாத முறையில் மேற்கொள்ளப்படுவது குறித்து யுனெஸ்கோ ஸ்தாபனத்தினால் அனுப்பப்பட்ட குழு ஒன்று கண்டனம் தெரிவித்தது.

சில ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான பௌத்த சின்னங்களை அகழ்ந்து எடுப்பதில் இலங்கை அரசு ஏன் அவசரம் காட்டுகிறது என்றும் அக்குழு கேள்வி எழுப்பியது.

"எல்லா இடங்களிலும் பௌத்த சின்னங்கள் புதைந்து கிடக்கின்றன. நிலத்தைத் தோண்டினால் போதும். அவை கிடைக்கின்றன" இப்படிக் கூறுகிறார் யுனெஸ்கோ குழு உறுப்பினர்களில் ஒருவரான ஜப்பானியர் டாய் கோரோ சிஹாரா.

1980 ஆம் ஆண்டில் இருந்து கலாசார முக்கோணத் திட்டத்தில் 30,000 தொழிலாளர் வரையில் பணிபுரிகின்றனர்.

இதற்கான செலவில் 60 சதவீதத்தை யுனெஸ்கோ தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் செலவீனங்கள் அதிகரித்து உள்ளன. இதற்கு முக்கிய காரணம் திட்டமிடப்படாத முறையில் அகழ்வு வேலைகள் இடம் பெறுகின்றன. என்பதே என்று விசாரணைக்கு குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து அகழ்வு வேலைகளை குறைக்கும்படி யுனெஸ்கோ இலங்கை அரசுக்குச் சிபார்சு செய்தது.

கலாசார முக்கோணத் திட்டம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவது குறித்தும் யுனெஸ்கோ விசாரணைக் குழு கலக்கம் அடைந்தது.

1980 ஆம் ஆண்டு கலாசார முக்கோணத் திட்டத்தை அங்குரார்ப்பணஞ் செய்து ஜனாதிபதி ஜெயவர்த்தன பின்வருமாறு பேசினார்:

புராதன சின்னங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எமது மக்களால் நிர்மாணிக்கப்பட்டவை. அந்த மக்கள் ஒரே ஒரு மொழியைப் பேசியவர்கள். அந்த மொழி சிங்களம்.

புத்தரின் போதனைப் படியே தேசிய ஒற்றுமையையும் சௌஜன்ய உறவையும் நாம் உறுதி செய்ய வேண்டும்'—

ஜனாதிபதியின் இந்த உரை ஆத்திரத்தை ஊட்டக் கூடியது. சிங்களவரும் தமிழரும் கசப்பான போராட்டம் ஒன்றை நடத்தும் நேரத்தில் இந்த உரை நிகழ்த்தப் பட்டது.

அகழ்வாராய்ச்சி நடக்கும் இடத்தில் இருந்த ஒரு புதைபொருளாராய்ச்சியாளர் பின்வருமாறு சொன்னார்:

'கலாசாரமுக்கோணத் திட்டத்துக்கான ஜனாதிபதியின் ஆதரவு முழுக்க முழுக்க அரசியல் தேவைகளைக் கொண்டது அது இப்போது பதவியில் உள்ளவர்களை சிங்கள மக்கள் மத்தியில் உயர்த்திக் காட்டுவதற்காக நடத்தப்படும் ஒரு பந்தாட்டம்' என்றார்.

கலாசார முக்கோணத் திட்டம் சந்தேகத்துக்கு இடமின்றி சிங்களவரின் பழம் பெருமைகளைப் புதுப்பிப்பதுடன், பிரச்சினைக்குரிய கால கட்டத்தில் சிங்கள இனத்தின் ஒற்றுமையை வலியுறுத்தவுமே பயன்படுத்தப்பட்டது.

சிங்களத் தேசிய வாதத்தைப் பலப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமுமாகும்.

அனுராதபுரம் படுகொலையைத் தொடர்ந்து கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் அகழ்ந்து எடுக்கப்பட்ட புராதனச் சின்னங்கள், பொருள்கள் எல்லாம் பாதுகாப்புக் கருதி கொழும்புக்குக் கொண்டு போகப்பட்டன.

# உருமாறியதால் கருமாறிய பழமொழிகள்

(வயவையூர் ரட்ணதுரை)

பழமொழிகள் பல காலப்போக்கில் பேச்சு வாக்கில் திரிபடைந்து, வார்த்தைகள், வடிவங்கள் உருமாற அவற்றின் மையக் கருத்துக்களும் மாறிவிட்டன.

சில பழமொழிகள் வடிவம் மட்டுமே மாறியுள்ளன. சில பழமொழிகள் கருத்துக்கள் மட்டுமே மாறியுள்ளன. ஒரு சில பழமொழிகள் வடிவங்களிலும் கருத்துக்களிலும் மாறியுள்ளன.

'அரசனை நம்பி புருசனைக் கை விட்டது போல்' என்ற பழமொழியின் உண்மையான வடிவம் 'அரசை நம்பி புருசனைக் கை விட்டது போல்' என்பதாகும்.

அதாவது; குழந்தைப் பேற்றுக்காக ஒரு அரச மரத்தை சுற்றி வரும் ஒரு மலடியானவள் அந்த அரசை நம்பித் தன் புருசனைக் கை விட்டதுபோல் என்பதாகும்.

'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' கல்லிருக்கும் போது எறிவதற்கு நாய் இருக்காது, நாய் இருக்கும் போது எறிவதற்குக் கல் இருக்காது. இதுவே நாம் எடுத்துக் கொள்ளும் கருத்து.

இந்தப் பழமொழிக்கு கிருபானந்தவாரியார் நம்பிக்கையை முன் வைத்து இன்னொரு விளக்கத்தை நம்முன் வைக்கிறார். ஒரு திருடன் ஒரு வீட்டிலே திருடச் செல்கின்றான். அந்த வீட்டின் முன் ஒரு நாய் படுத்திருக்கின்றது. அந்தத் திருடனுக்கு இருட்டிலே அந்த நாயைப் பார்க்கும்போது ஒரு பெரிய கல் இருப்பதைப் போல் தெரிகிறது. இதனால் திருடன் அந்த நாயைக் கல் என்று எண்ணிப் பயமின்றி அந்த வீட்டிலே திருடுகின்றான். இதே திருடன் அடுத்த வீட்டிலே திருடப் போகையில் அங்கே ஒரு கல் கிடக்கிறது. அந்தக் கல்லை நாய் என்று நினைத்துத் திருடன் திருடாமலே திரும்புகிறான். இந்த விளக்கத்தை முன் வைப்பதன் மூலம் வாரியார் மத நம்பிக்கையை முன் வைக்கிறார். கோயிலிலே இருக்கின்ற சிலைகள் ஒரு ஆத்திகன் கண்களுக்கு கடவுளாகவும், ஒரு நாத்திகன் கண்களுக்கு சிலைகளாகவும் தெரிகிறது. சிலையைக் கண்டால் கடவுளைக் காணோம். கடவுளைக் கண்டால் சிலையைக் காணோம் எனும் கருத்தையே வாரியார் முன் வைக்கிறார்.

'மண் குதிரையை நம்பி ஆற்றைக் கடக்க முயலுவது போல்' ஆற்று நீரோட்டத்தால் ஆற்று மண் அடித்துச் செல்லப் பட்டு ஆற்றின் இடை இடையே மண் குதிர்கள் (மணல் கும்பங்கள்) மேடாகக் காணப்படும். ஆற்றங்கரையில் இருந்து பார்க்கும் போது அவை மேட்டு நிலங்களாக ஆற்றின் இடை இடையே தெரியும். அவற்றின் மீது காலை வைத்து நடந்து ஆற்றைக் கடக்க முற்பட்டால், அந்த மணல் குதிர்கள் சரிந்து ஆட்களை ஆற்றிலே விழுத்தி விடும். இதை முன் வைத்தே 'மண் குதிரை நம்பி ஆற்றைக் கடக்க முயலுவது போல்' என்று அப பழமொழி இருந்திருக்க வேண்டும்.

'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' ஆயுர்வேத மூலிகை மருத்துவ காலத்தில் இப் பழமொழி வழக்கில் இருந்திருக்க வேண்டும். அந்நாட்களில் மருந்துகள் தயாரிப்பதற்காய் வெட்டப்படும் மூலிகை வேர்களின் எண்ணிக்கையில் மருத்துவரின் தராதரம் கணிக்கப்பட்டிருக்கலாம். இதனால் இப்பழமொழி 'ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்' என்று ஆதியில் இருந்து பின்னர் திரிபுற்றிருக்க வேண்டும்.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு' சில தலைமுறைகளுக்கு முன் ஆண்கள், இன்று பெண்கள் கை வளையல்கள் அணிவது போல் உலோகத்தாலான ஒரு பெரிய தடித்த காப்பு அணிந்தனர். இந்தக் காப்பைப் 'பூண்' என்று அழைத்தனர். இதனால் இப்பழமொழியும் 'கைப் பூணுக்குக் கண்ணாடி எதற்கு' என்று இருந்திருக்க வாய்ப்புண்டு.

'கலியாண வீட்டிலே தாலி கட்ட மறந்தது போல்' – இந்துக்களின் கலியாண வைபவங்களில் தாலிக்கொடி கட்டமுன் தாலியை எல்லோர் முன் எடுத்து வந்து காட்டுவார்கள். கலியாண வீட்டுக்கு வந்திருந்தவர்கள் அதைத் தொட்டு ஆசீர்வதிப்பார்கள்.

இந்த ஆசி தாலி நிலைப்பதற்கான ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கணிக்கப் படுகின்றது.

சில வேளைகளில் முகூர்த்த நேர அவசரத்தில் தாலி ஆசீர்வாதத்திற்காகக் காட்டப்படாமலே கட்டப்பட்டுவிடும். இதனால் இப்பழமொழியும் 'கலியாண வீட்டிலே தாலி காட்ட மறந்தது போல்' என்று இருந்திருக்க வேண்டும்.

'அறப்படிச்ச முஞ்சூறு கஞ்சிப்பானைக்குள் விழுந்தது போல்' – சோறு சமைக்கையில் கஞ்சி வடிப்பர். அப்படிக் கஞ்சி வடிக்கையில் சோற்றுப் பானையின் முன் இருந்து சில சோற்றுப் பருக்கைகளும் கஞ்சிப்பானைக்குள் விழுந்து விடும்.

இதே போல் ஒரு சமூகத்துக்கோ அல்லது ஒரு எண்ணிக்கையான மக்களுக்கே ஒரு நன்மை பயக்கும்விடயமாக ஒருசெயல் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்போது ஒரு சிலருக்கு பாதிப்பு ஏற்படவே செய்யும். இக் கருத்தை முன் வைத்தே இப்பழமொழியும் 'அற வடிக்க முன் சோறு கஞ்சிப் பானைக்குள் விழுந்தது போல்' என்று இருந்திருக்க வேண்டும்.

இப்படி வழக்கில் இருக்கும் பல பழமொழித் தொடர்களுக்கு வெவ்வேறு வியாக்கியானங்களும் விளக்கங்களும் கொள்ளப்படுகின்றன.

திரிபடைந்த பழமொழிகளுக்கும் மூலமான பழமொழிக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்வது ஒரு சுவையான விடயமாகும்.

# பாலர்பாடல் பாவலவன் பாவலவன் சத்தியசீலன்

குழந்தையின் தூண்டலால் தந்தை துலங்கினான். இது வேடிக்கைக் கதை அல்ல. ஒரு கவிஞனின் வாழ்வில் நிகழ்ந்த நிஜ சம்பவம்.

அமிழ்தினி என்ற குழந்தை கோழிக்குஞ்சொன்றைத் துரத்திப் பிடிக்க முயல்கிறாள். அது வேகமாக ஓடி மறைகிறது. கவலையடைந்த குழந்தை தந்தையிடம் செல்கிறது சொட்டுக்கால் கோழிக்குஞ்சு சோக்காய் ஓடுது என்று கூறுகிறாள். இதைக் கேட்ட தந்தை ஒரு கவிஞன். குழந்தையின் கதை பாடலாகிறது

பட்டுச் சட்டை
போட்டமாரோ
பஞ்சைப் போன்ற
குஞ்சாரே
சொட்டுச் சொட்டுக்
காலாலே
சோக்காய் ஓடிப்
பார்க்கின்றீர்!

மகன் வண்ணனையும், மகள் அமிழ்தினியையும் மையமாக வைத்து அவர்களின் பாலர் பருவ அனுபவங்களைத் துணைக் கொண்டு பல பாடல்களை இப்படிப் பாடியவர்தான் குழந்தைக் கவிஞர் பா. சத்தியசீலன்.



பா. சத்தியசீலன்

இவர் ஒரு பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியர். ஒரு பண்டிதர். பேரா[illegible] தமிழ் [illegible] இவரது [illegible] புப் பட்டதாரி. இயல்பான கவிதை உள்ளத்துக்கு இவை துணை நிற்கின்றன. ஆசிரிய அனுபவமும், தமிழ் அறிவும இவரது கவிதைகளுக்கு மெருகு ஊட்டுகின்றன.

ஆரம்ப காலத்தில் கவிதைகள் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தன.

கவிதைத் துறையில் தன்னை ஊக்குவித்த பெரியார்களாக மூத்த பத்திரிகையாளர் திரு. எஸ். டி. சிவநாயகம், மூத்த கவிஞர் முருகையனையும் இவர் நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

( அறிமுகம் )

சிறுவர் கவிதை நாடகம்

1976 இல் இவர் வெளியிட்ட 'பாட்டும் கூத்தும்' வெளிவரவுள்ளன 'சாம் பார் வாழ்க, வடை வாழ்க' என்ற நூலும் சிறுவர் கவிதை நாடகத் [illegible]

புதிப் பாடல்கள்

புதிய பாடல்களை இயற்றி, அவற்றைத் தனிநூலாக வெளியிட்டு உள்ளார். அதுவும் ஒரு புது முயற்சி. 'கப்பல் போகுது போகுது கடல் இல்லாமல் போகுது' என்ற பாடலை ஒரு பக்கம் வெளியிட்டு, மறு பக்கத்தில் இப்புதிருக்கு விடையாக,

'கப்பல் சின்னக் கப்பல் கொப்பித் தாள் கப்பல்,' என்று பாடுகிறார். இப்படிப் புதிர்ப்பாடல்களை மட்டும் கொண்ட நூல் 'கப்பல்'

இவரது ஆக்கங்கள் இதுவரை பதினான்கு சிறுவர் நூல்களாக வெளிவந்து உள்ளன. பழலைத் தமிழ் அமுதம், புதியால் வென்ற நத்தையார், சந்தனப் பொட்டு சுந்தரம்பிள்ளை ஆகிய மூன்று நூல்களும் புவிசெல் நிறுவனம் சிறந்த நூல்கள் என்று தெரிந்தவை.

மொழி பெயர்ப்பு

ஆங்கிலத்தில் உள்ள சிறுவர் பாடல்களைத் தமிழில் தந்துள்ளார். சிறிது கூடச் சுவை குன்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப் பறவைகள்

த. வைத்திலிங்கம்



பூரணம் இப்பொழுது முருகன் கோவிலுக்கோ அல்லது வேறு ஏதாவது விசேஷங்களுக்கோ போவதை நிறுத்தி விட்டாள்.

இளைய மகள் சரசுவைப்பற்றிய செய்திகள் அனேகமாக கிராமத்தில் சகலருக்கும் தெரிந்த ஒரு விஷயமாகிவிட்டது. வாடகைக்கு கார் வைத்திருக்கும் சரவணமுத்துவின் மகன் ஜேர்மனியில் இருக்கின்றான். அவன் தனது வீட்டாருக்குக் கடிதம் எழுதும்போது 'அடைவு கடை கனகசபையின் இளைய மகள் சரசுவும் கலியாணம் முடிச்சுக் கொண்டு இஞ்சை வந்திருக்கினம். தற்செயலாய் கண்ட இடத்தில் ஊர்ப்புதினங்களை அறிந்து கொண்டேன்' — என்று எழுதியிருந்தான்.

அதிலிருந்து தொடங்கிய ஊராரின் ஆவல் நிறைந்த விசாரணைகள், எல்லாவற்றையும் அம்பலத்துக்குக் கொண்டு வந்து விட்டன.

'இளைய மகளும் போட்டாளாம்! பெடியன் எப்பிடி'?

'என்ன பூரணம் சொல்லாமல் கொள்ளாமல் விஷயத்தை முடிச்சுப் பெம்பிளையையும் வெளியிலை அனுப்பிப்போட்டாய்!'

இப்படிச் சிலர் பூரணத்தை நேரில் கேட்டதிலிருந்து அவள் வெளியே போவதை நிறுத்தி விட்டாள்.

கனகசபைக்கு ஒரு கவலையுமில்லை ஏனெனில் அவர் வீட்டை விட்டு வெளியே போவது மிகமிக அபூர்வம்!

'ஊருக்குப் பயந்து சாகிறியள்! பேசாமல் உங்கடை அலுவலைப் பாருங்கோ!'

திலகம் தாயின் மீது கோபிப்பாள்.

பூரணத்துக்கு வியப்பாக இருந்தது.

பொதுவாக திலகம் தான் தன் பேச்சு, செயல் யாவற்றிலும் ஒரு நிதானத்துடனும், சதா கூச்சப்பட்டும் இருந்தவள்!

இவள் இப்படி மாறிப் போனாளே என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள்.

இப்பொழுது எல்லாமே காலம், முறை என்று ஒரு நியதிகளை மறந்து செயல்பட ஆரம்பித்துள்ளன.

மனிதர்கள் நெஞ்செல்லாம் வஞ்சகமாய் முறை தவறி நடக்கும் போது இயற்கை மட்டும் என்ன சளைத்ததா?

கடந்த இருபது நாட்களாக சூரியன் எங்கு போய் ஒழித்துக் கொண்டானோ தெரியாது! மப்பும் மந்தாரமுமாய் பேய் மழை பெய்து ஊரே வெள்ளக் காடாய்க் காட்சி அளித்தது. தாழ்வான இடங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்று தற்காலிகமாகக் குடியேறினர். வெள்ள அகதிகளுக்கான நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

வீடு வீடாகப் பணம், உடுப்புக்கள் என்று இளைஞர்கள் சேகரித்தனர் அரசு இயந்திரம் செயல்

## ( அத்தியாயம் - 8 )

பட்டு அந்த உதவிகள் வர வாரக்கணக்கில் செல்லும்!

திலகம் வீட்டுக்கும் சில இளைஞர்கள் வந்தனர் சரசு வைத்து விட்டுச் சென்ற நல்ல சேலைகளையும் தனது இரண்டொரு சேலைகளையும் திலகம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பூரணம். வந்திருந்தவர்கள் வெளியே சென்றதும் திலகத்தின் மேல் பாய்ந்தாள்.

'என்னடி திலகம், உனக்கு மூளை ஏதன் இருக்கே? இந்த நல்ல சேலைகளைக் கொண்டு வந்து கொடுத்தியே!'

'நல்ல சேலைகளைக் கொடுக்காமல் கிழிந்ததையே கொடுக்க? அதுகள் உடுக்கத்தானே வேண்டும்!

'சரசு, நீ கட்டுவாய் என்றுதானே அந்த நல்ல சேலைகளை வைச்சுப் போட்டுப் போனவள்! அதையும் கொடுத்துப் போட்டியே---?' பூரணம் அங்கலாய்த்தாள்.

'இஞ்சை உள்ளதையே கட்ட ஆள் இல்லாமல் கிடக்கு---' இப்படிச் சொல்லிக் கொண்டே திலகம் உள்ளே சென்றாள். பூரணம் ஏதோ முணுமுணுத்தபடியே திலகம் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அன்று வெள்ளிக்கிழமை. காலையிலிருந்தே பெய்த மழை மத்தியானம் சிறிது ஓய்ந்தது. அவசரம் அவசரமாகக் குளித்து விட்டு திலகம் முருகன் கோயிலுக்குச் சென்றாள். சொல்லி வைத்தாற் போல கோயிலுக்கு வேறு ஒருவரும் வரவில்லை. வழக்கமாகப் பூசை செய்யும் குருக்கள் காணப்படவில்லை. அவரின் தந்தையார் தான் பூசைக்காரியங்களைக் கவனித்தார்.

அவருக்கு வயதாகிவிட்டபடியால், அலுவல்களை மிக ஆறுதலாகவே செய்து கொண்டிருந்தார்.

மழை மீண்டும் பெய்யத் தொடங்கியது. திலகம் திடுக்கிட்டாள். அவசரத்தில் குடையை எடுத்து வர மறந்து விட்டாள்.

பழனி ஆண்டவர் சன்னதியில் பூசை நடந்து கொண்டிருந்த போது குடையும் கையுமாய் சிவனேசன் கோவிலுக்குள் நுழைந்தான்.

அவனைத் திலகம் பார்த்து விட்டாள். அவளின் நெஞ்சு படக் படக்கென்று அடித்தது. இனம் தெரியாத மகிழ்ச்சி உணர்வு ஒன்று. அவளின் உடலெங்கும் மின்சாரமாய் ஓடியது. சிவனேசன் திலகத்தைக் கண்டதும் முகம் மலரச் சிரித்தான். பதிலுக்கு திலகமும் அடக்கத்துடன் சிரித்துக் கொண்டாள்.

பூசை யாவும் முடிந்து குருக்கள் விபூதிப் பிரசாதம் வழங்கினார்.

''என்ன ஐயா! இன்றைக்கு ஆட்கள் ஒருவரையும் காணவில்லை?'' சிவனேசன் குருக்களைப் பார்த்துக் கேட்டான்.

''ஏன் நான் நிற்பது இவரின் கண்களுக்குத் தெரியவில்லையோ?'' திலகம் பொய்க் கோபத்துடன் தனக்குள் சொல்லிக் கொண்டே அவனை நோக்கினாள்.

சிவனேசன் குறும்பு ததும்ப ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துக் கொண்டான். 'என்ன செய்கிறது! மழை ஏதோ உலகத்தை அழிக்கிற மாதிரிப்பெய்கிறது! வழக்கமாக வாற ஆட்களும் கூட இன்டைக்கு வரவில்லை!'

குருக்கள் குறைப்பட்டுக் கொண்டே உள்ளே போய் விட்டார்.

'என்ன திலகம்! பேசாமல் நிற்கிறீர்?'

'என்ன மாதிரி வீட்டுக்குப் போவது என்றுதான் யோசிக்கிறன். குடையும் கொண்டு வரவில்லை---'

'அப்ப அது மட்டும் தான் யோசனையா?'

ஆவல் ததும்ப சிவனேசன் திலகத்தை நோக்கினான். திலகம் பேசாமல் நின்றாள். அவளின் இதழ் கடையில் ஒரு புன்னகை ஓடி மறைந்தது.

'திலகம், நான் இந்தக் கிழமை எப்பிடியாவது உம்மைக் கண்டு கதைக்க வேணுமென்று ஆசைப் பட்டேன். நல்ல காலமாய் இன்றைக்கு நேரம் கிடைத்துள்ளது. இதிலை கொஞ்சம் ஆறுதலாய் இருந்து கதைப்போம்! சொல்லி வைச்சாப் போலை வேறு ஒருவரும் இடைஞ்சலாய் இல்லை! மழைக்கு நன்றி சொல்ல வேணும்---!'

வெகு உற்சாகமாய் அமைந்தது அவனின் குரல்.

ஆனால்,

திலகமோ, வெகு மௌனமாய் நின்றாள்.

'இந்த மௌனம்தான் எனக்குப் பிடிக்காத ஒன்று! இதிலை இருமன்'! சிவனேசன் கீழே இருந்து விட்டான். இருந்தது மட்டுமல்ல, சடாரென்று திலகத்தின் கையைப் பிடித்து இழுத்தும் விட்டான்!

'என்ன சிவா இது! யாரும் பார்த்தால்--'

கோடத்துடன் ஒலித்தது திலகத்தின் குரல்.

உண்மையில் அவனுடைய ஸ்பரிசம் பட்டதும் திலகம் குதூகலம் தான் அடைந்தாள். ஆனால் பெண்களுக்கே இருக்கும் நாணமும் வெட்கமும் பயமும் முன்னுக்கு நின்றன.

திலகம் ஒன்றும் பேசாமல் கீழே அமர்ந்து கொண்டாள்.

இருவரும் முன்னர் இப்படிப் பிறர் அறியாமல் சந்தித்துக் கதைத்ததுண்டு. கடிதங்கள் பரிமாறியதுண்டு. ஆனாலும் இன்று மாதிரி சாவகாச

## (இரு மாத குறுநாவல்)

மாக இருந்து கதைக்கும் சந்தர்ப்பம் முன்னர் ஏற்படவில்லை. உள்ளுக்குள் திலகம் இச் சந்தர்ப்பத்தை விரும்பினாலும் அதை வெளிக்காட்டாமல் இருந்தாள்.

'அது சரி, எங்களுடைய விஷயத்தைப்பற்றி அம்மா சொல்லிவிட்டவ தானே! இதுவரை நீங்கள் ஒரு மறுமொழியும் சொல்லி விடவில்லையே! இப்படி எத்தனை நாளைக்கு நாங்கள் மற்றவை கண்டும் காணமலும்......'

பெரும் குறையுடன் ஒலித்தது சிவனேசனின் குரல்.

'உங்களுக்குத் தெரியும் தானே சிவா எங்களுடைய வீட்டு நிலைமை! சரசுவின் கலியாணத்துக்குப் பிறகு வீட்டில் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தோஷமும் இடம் தெரியாமல் போய் விட்டது! இந்த நிலையில்...'

'அது எனக்குப் புரியும் திலகம்! அதுதான் நாங்களும் கொஞ்ச நாள் போகட்டும் என்று பேசாமல் இருந்து விட்டோம். ஆனால் இப்ப அது எல்லாம் நடந்து ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகி விட்டனவே! இனிப் பேச்சைத் தொடங்கலாம் தானே! உங்கடை அப்பா என்ன சொன்னவர்...?'

'அப்பாவோ... அப்பாவுக்கு இதுவரை ஒன்றும் தெரியாது! அம்மா இன்றுவரை அவரிடம் இது பற்றி ஏதாவது சொன்னவோ எனக்குத் தெரியாது! உங்களுக்குத் தெரியும் தானே அப்பாவின் குணம்!'

திலகத்தின் முகம் இறுகியது.

'அதுசரி உம்முடைய தம்பி சந்திரன் இப்ப எங்கே? வீட்டுக்கு வாறவனே?'

சிவனேசன் பேச்சை மாற்றினான்.

'அம்மாவுக்கு அது வேறு கவலை. அம்மாவுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தான்! நாங்கள் என்னசெய்யமுடியும்? அவனும் அவனுடைய போக்கும்!'

திலகம் சலித்துக் கொண்டாள்.

'அவன்தான் மனுசன்! சுதந்திரமென்று சொல்லிக் கொண்டு என்ன துணிகரமான வேலை எல்லாம் செய்கிறன்! எங்களைப் போலவே? நாங்கள் உத்தியோகத்தையும் விட்டுப் போட்டு வீட்டுக்குள்ளை இருக்கிறம்!

'ஒவ்வொரு நாளும் பேப்பர் வாசித்து விட்டு நாலுபேருடன் கதைச்சுப் போட்டு போய் சாப்பிட்டு நித்திரை கொள்கிறம்!'

'எல்லோரும் ஒரே மாதிரி இருக்க முடியாதே சிவா! அது ஒவ்வொருவருடைய மனப்போக்கு!'

'அப்பிடி இல்லை திலகம்! நான் இதைப்பற்றிக் கொஞ்ச நாட்களாய் யோசித்துக் கொண்டு தான் இருக்கிறன். நாங்கள் பெடியன்களை பலிக்கிடாக்களாய் முன்னுக்கு விட்டுப் போட்டு சும்மா இருக்கிறம்! ஏதோ நாங்களும் வயதுக்கு ஏற்ற மாதிரி செய்யக் கூடிய வேலைகளை என்றாலும் செய்ய வேணும்!'

'வடிவாய் செய்யுங்கோ! நான் அதற்குத் தடையில்லை! வீணாய் போய் மோட்டுத்தனமாய் மாட்டுப்படாதேயுங்கோ! ஒவ்வொருவரும் தங்களுடைய பங்களிப்பு என்னவென்று யோசித்து முடிவு எடுக்க வேண்டியதுதான்'

இதற்குள் குருக்கள் வெளியில் வந்தார். ஒரு சிறிய இலையில் கொஞ்சம் சர்க்கரைப் பொங்கலை வைத்து சிவனேசனிடம் நீட்டினார்.

'கொஞ்சம் பிரசாதம் சாப்பிடுங்கோ'

'அதற்கென்ன ஐயா!'

சொல்லிக் கொண்டே இரு கைகளாலும் அதைப் பெற்றுக் கொண்டான் சிவனேசன்.

குருக்கள் மறுபடியும் உள்ளே போய்விட்டார்.

சிவனேசன் பிரசாதத்தை தானும் எடுத்துக் கொண்டு மீதியை இலையுடன் திலகத்திடம் நீட்டினான்

திலகம் அதை வேண்டி கீழே வைத்து விட்டாள்.

'சாப்பிடுமன்!'

ஆனால் திலகம் பேசாமல் இருந்தாள்.

'ஏன் வெட்கப்படுகிறீர்...... நான் தீத்தி விடவோ...?'

குறும்பாகச் சிரித்தான் சிவனேசன்.

'உங்களுக்கென்ன பைத்தியமோ...?'

சொல்லிக் கொண்டே இலையில் இருந்த மிகுதிப் பிரசாதத்தை எடுத்து வாய்க்குள் போட்டுக் கொண்டாள் இல்லாவிடில் சொன்னமாதிரியே சிவனேசன் செய்து விடுவான் என்று அவளுக்குத் தெரியும்

'இந்தாரும் இதைப் பிடியும்! இதுதான் நான் தாற கடைசிக் கடிதம்!'

சிவனேசன் ஒரு கடிதத்தை எடுத்து திலகத்திடம் கொடுத்தான்.

திலகம் துணுக்குற்றாள்.

'ஏன் சிவா, இப்படிக் கடைசிக் கடிதம் என்று சொல்கிறீர்கள்?' அவளுக்குக் கண்கள் கலங்கி விட்டன.

'பின் என்ன? நானும் கடிதம் கடிதமாய் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறன். வீட்டிலே கலியாணம் பேசி ஒரு நாளைக்கு நாலு புரோக்கர்மார் படை எடுக்கினம்! நான் எத்தினை நாளைக்குப் பொறுப்பது? நீரும் ஒரு பிடி கொடுக்காமல் மௌனமாய் இருக்கிறீர்!

'அம்மா வாறு போலை கிடக்கு...!'

சொல்லிக் கொண்டே திலகம் தான் இருந்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

நகைச்சுவை நவீனம்

# வடக்கே போகும் ராமனுஜம்

★ திக்கவயல் ★

**வாங்க! வாங்க! காசு தாங்க!**

'கலங்காதிரு மனமே உன் கனவு ஒருநாள் நனவாகுமே என' இலங்கேஸ் ஜெட்டிக்கு நடந்து கொண்டிருந்தான்.

சர்வோதயத்தில் இருந்து ஜெட்டியை அடைய இலங்கேசனுக்குப் பத்து நிமிடம் பிடித்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக அந்த நேரத்திலும் இராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

பொலீஸாரும் தமது கடமையைச் செய்வதற்கு உஷாராக நின்று கொண்டிருந்தார்கள்.

புதிய பொறுப்பதிகாரி தலைமன்னார்ப் பொலீஸுக்கு வந்திருப்பதால் அவர்கள் தமது கடமைகளை நன்கு பார்ப்பதாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டார்கள்.

ஜெட்டியை நோக்கிச் சென்ற இலங்கேசன் அந்த மேடைக்குத் தனது பெட்டியைக் கொண்டு சென்றான்.

அதற்கு முன்பு கம்பீரமாகக் கடலில் கட்டப்பட்டிருந்த ராமனுஜம் கப்பலை ஒரு பார்வை பார்த்தான்.

இந்தக் கப்பல் எத்தனை பேரின் வரலாறுகளைக் கண்டது; எத்தனை கண்ணீர்க் கதைகளைக் கண்டு இருக்கும் என உள்ளத்தில் நினைத்துக் கொண்டான், இலங்கேசன்.

ஜெட்டியில் நின்ற இலங்கேசன் நானூறாவது ஆளாக நின்றான்.

இந்தக் 'கியூ' வரிசையிலே ஒழுங்கு முறையைத் தாண்டி ஓட எண்ணிடும் ஒரு கூட்டத்தையும் எண்ணி அவன் எரிச்சல்பட்டான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அங்கு உறங்கிக் கிடந்தன.

வல்லவனுக்கு வல்லவன் ஆட்சி அங்கு நடப்பதாக அவனை எண்ண வைத்தது.

முதல்நாள் கப்பலில் இடம் கிடைக்காமையால் கப்பலைப் பார்த்து கண்கள் பூத்த ஒரு கூட்டத்தினர் ஆளுக்கு மேல் ஆளாக ஏறி விழுந்து கொண்டிருந்தார்கள்.

இவர்களையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஆயிரத்து ஐநூறு பேராவது அங்கு நின்றிருப்பார்கள்.

இலங்கேசனுக்கு மனம் அலைபாய்ந்து கொண்டு இருந்தது. இன்று கப்பலைப் பிடிப்போமா இல்லையா என அவன் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

அவன் விதி எப்படி இருக்கும் என்பது போகப் போகத் தெரியும்!

சொந்தச் சகோதரன் என்றாலும் ஒருவர் விதியை நிர்ணயிக்க அவன் சகோதரனுக்குக் கூட முடியாது.

ஆகையால் இலங்கேசனின் விதியை நிர்ணயிக்க எமக்கோ, உங்களுக்கோ சக்தி கிடையாது.

கோப்பி, பிளேன்ரி வியாபாரிகள் தொடங்கி இந்தியாக் காசு விற்பவர்கள் வரை அங்கு ரகசிய வியாபாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

A முதல் Z வரை நம்பர் அடித்த போர்ட்டர்கள் அங்கு பிரயாணிகளின் பெட்டிகளை கஸ்டம்ஸிற்குக் கொண்டு போய் எதுவித தொல்லையும் இன்றிக் கப்பலுக்குள் ஏற்றப் பேரம் பேசிக் கொண்டு நின்றார்கள்.

இலங்கேசனின் பெட்டியும் K நம்பர் போர்ட்டரிடம் கை மாறியது

காலை 5-30 மணிக்குப் பிரயாணிகளைச் சோதனையிடுவதற்காகக் கேட் திறக்கும் சத்தம் கேட்டது.

பட்டியைத் திறந்து விட்டால் ஓடும் மந்தைக் கூட்டம் போல் பிரயாணிகள் ஒருவரை ஒருவர் நெருக்கியடித்துக் கொண்டு நின்றனர்.

'கேட் கீப்பர்' பாஸ் போட்டையும் ரிக்கட்டையும் பார்த்த பின்பு 'ஷட் அவுட்' காரருக்கு முன்னுரிமை கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

கியூ வரிசைகளை கட்டத் தொடங்கியது.

பச்சைச் சேட் அணிந்திருந்த ஒரு வாலிபன் எங்கோ ஒரு கம்பியைப் பிடித்து, பூவரச மரத்தில் இருந்து இறங்கி வரும் 'எரிப்புழு' போன்று கியூ வரிசையில் இறங்கினான்.

அவனை வெளியே விரட்டுளனப்பலகுரல்கள் எழும்பின ஆனால் அவனுக்கு ஆதரவான மனி

**அத்தியாயம் - 3**

தர்கள் பலர் முன்னுக்கு நின்றதால் அராஜகத்தை எதிர்த்துக் கிளம்பிய குரல்கள் பலவீனப்பட்டன.

அந்த மனிதன் முன்னேறி விட்டான்.

கண்டதும் காணாதது போலப் பொலீஸார் சிலர் நின்றிருந்தார்கள்.

அவனுக்குப்பல மணித்தியாலங்கள் முன்பு வந்தவர்கள் பலர் பின்னே நின்றனர். 'இதுவும் ஒரு தரப்படுத்தல்' எனப் பின்னே நின்ற ஒருவர் சொல்லிக் கொண்டார்.

பலசாலிகள் உயிர் பிழைத்தனர் (Survival of the fittest) என்ற டார்வினின் கொள்கை இப்போதுதான் தெரிய ஆரம்பித்தது.

'ஷட் அவுட்'டில் நின்ற நாற்றுக்கணக்கானோரும் சுங்கத்திற்குள் சென்றதும் மீண்டும் கேட் கீப்பர் கதவினை அடித்துச் சாத்தினர்.

'இன்றைக்கு மேசைக்கு நிறையக் கேட்கிறார்கள்' ஒருவர் அலுத்துக்கொண்டார்.

'இங்கு லஞ்ச அதிகாரிகள் வருவது இல்லையா'? இன்னொருவர் வினாத் தொடுத்தார்.

'கடலை இங்கு அலை எட்டிப் பார்ப்பதேயன்றித் தலைமன்னார் பியருக்கு லஞ்ச அதிகாரிகளாவது வருவதாவது---' இன்னொருவர் வசை பாடித் தீர்த்துக் கொண்டார்.

ஒருவர் தான் கொண்டு சென்ற பொருள்களுடன் திருப்பிவிடப்பட்டார்.

'போர்ட்டர் செற்றிங்' இல்லையென்றால் உப்பிடித்தான். போர்ட்டரின் அனுசரணையுடன் நாட்டையே வெட்டி அனுப்பக்கூடியவர்கள் எங்கடை ஆட்கள்' இன்னொருவர் விமர்சித்தார்.

'சுதந்திர வர்த்தக வலயம் கட்டுநாயக்காவிலும், சுதந்திர லஞ்ச வலயம் தலைமன்னாரிலும் நடக்கின்றன' என்று இன்னொருவர் தனது வயிற்றெரிச்சலைக் கொட்டினார்.

'நூற்றுக்கு இலங்கைக் காசு இருநூற்று ஐம்பது' என ஒரு குரல் ஜெட்டியில் ஒலித்தது.

இந்தியாக் காசு நூறுக்கு இலங்கைக்காசு இருநூற்று ஐம்பது வேண்டுமாம்!

இவர் பணவீக்கத்தைக் காட்டுகின்றாரா அல்லது கள்ள வியாபாரத்தில் கொடி நாட்டப் [illegible] ராக இருந்தது.

[ தொடரும் ]

# வரவேற்புடன் வளர்ந்து வருகிறது தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்

## நாடகம் ஒரு சமூக சக்தியாக வேரோட வேண்டும் என்பது இதன் அவா

இலங்கையில் நாடகக் கலைச் செழுமையை வளர்த்தெடுக்க, காலத்துக்குக் காலம் முயற்சிகள் பல நடந்து வந்திருக்கின்றன.

எனினும் இந்த முயற்சி வழியில் வித்தியாசமான உத்திகளை பரிட்சார்த்தமாகவேனும் கையாளும் துணிவு நாடகத் தயாரிப்பு உலகில் நெடுநாள் நுளையாமலே இருந்து வந்துள்ளது.

அதனால் தமிழ் நாடக உலகில் நலிவு நிலை ஏற்பட்டது.

கலை என்பது கொச்சையானவற்றையும் பச்சையான விடயங்களையும் பாசாங்குகளையும் மலிவு விலைக்கு விற்பது என்ற போலித்தனத்துள் மாட்டுப்பட்டுக் கொண்டது.

புதிய விடயங்கள் பற்றிய அவா அற்ற போக்கினர் கலைவடிவங்கள் என்ற பெயரில் பழைய விடயங்களையே பாடம் பண்ணி ஒப்படைத்தனர்.

இந்த தேக்க நிலையுள் தான் நம்பிக்கையூட்டும் சக்தியாக இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம் பல பரிட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டது.

ஜேர்மனி நாடக வித்தகரான பிரெஜ்ட்டின் நாடக உத்திகளில் அவர்கள் நாட்டம் செலுத்தினர்.

உணர்ச்சி வட்டத்துக்குள் இரசிகனை இழுத்து கிளு கிளுப்பை உண்டாக்காமல், அல்லது அழவைக்காமல் சமநிலையை இழக்கப்பண்ணாது பார்வையாளனை வைத்துக் கொண்டிருப்பதே பிரெஜ்ட்டின் உத்தியாகும்.




புரட்சிகரமானபோக்குகள் பலவற்றைக் கொண்ட இந்த உத்தியானது இலங்கை அவைக்காற்றுக்கழக நாடக முயற்சிகளிலும் இழையோடி இருந்தது.

" அப்ஸேட்டிருமா " என்ற அபத்த நாடக வடிவங்கள் கொழும்பு நகர மேடைகளில் அரங்கேற்றப்பட்டன.

உயர்மட்ட வாசிகளைப் பழக்கமுள்ளவர்கள் மத்தியிலேயே இந்த நாடகங்கள் ஓரளவு செல்வாக்குப் பெற்றன.

எனினும் படிப்படியான பலமாற்றங்களைப்பெற்று இது பல மட்டங்களையும் எட்டக்கூடிய நிலைக்கு வளர்த்தெடுக்கப்பட்டது. இப்போது இந்த நிறுவனம் தமிழியல் — நூல் நிறுவனம் என்ற அமைப்பைக் கட்டி எழுப்புவதற்காக நிதி சேகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறது.

பல துறை சார்ந்த தரம் வாய்ந்த நூல்களை வெளியிடும் பணிக்கு தமிழ் அவைக்காற்றுக்கழகம் தனது நாடக முயற்சிகளைக் கருவியாகக் கொண்டு செயற்படுகிறது.

இந்த வகையில் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் அன்சன் மண்டபத்தில் இரு நாடகங்களை தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் அரங்கேற்றியது.

இந்த முயற்சி மேலும் பல தூண்டுதல்களையும் பெற்று சிறந்து ஓங்க வேண்டும்.

அதனால் தமிழியலானது வெறும் அரசியல் வட்டத்துக்குள் நின்ற அர்த்த புஷ்டியை இழக்காமல் ஆரோக்கியமான வழியில் முன்னேறவும் புதிய வளர்சசிக்கான பூர்வாங்க பாதையை தெளிவாக வளர்க்கவும் இது உதவ முடியும்.

கலையுலகில் எங்கள் பயணம் புதியது---என்று கூறும் தமிழ் அவைக் காற்றுக் கலைக்கழகம் தனது செய்தியில் இவ்வாறு தெரிவிக்கிறது.

''தமிழில் சிரிய நாடகங்கள் பெறும் பரிசோதனை முயற்சிகளாக நகர்ப்புறங்களில் ஓரிரு மேடையேற்றங்களோடு மறைந்துவிடும் ஒரு அவலச் சூழலை எமது நாடக வரலாறு எமக்கு உணர்த்துகிறது.

★ சிவன் ★

இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம் காத்திரமான தமிழ் நாடகத்தை ஒரு பரந்துபட்ட மக்கள் சார்ந்த இயக்கமாக மாற்றுவதற்கு தீவிரமாக முயன்று கொண்டிருந்தது அதற்குக் கிடைத்த வரவேற்பு எமக்கு மிகுந்த நம்பிக்கையையும் பூரிப்பையும் தருகிறது

தொழில் ரீதியல்லாத கலைஞர்களின் சாத்தியத்தை மீறி; நாடகம் மக்களையும் மக்கள் நாடகத்தையும் பாதிக்கக் கூடிய ஒரு சமூக சக்தியாக இது மிளிர வேண்டுமென்பதே எமது அவா''

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு முறை தாய் தந்தை இருவரில் சிறந்தவர் யார்? என்று கேட்டார்கள். ''தாய்'' என்று பதில் சொன்னார்கள் நபிகள் நாயகம் அவர்கள். மறுபடியும் ''தாய், தந்தை'' இருவரில் சிறந்தவர் யார்?'' என்று கேட்டார்கள் ''தாய்'' என்று பதில் வந்தது.

மூன்றாவது முறையாகவும் ''தாய் தந்தை இருவரிலும் சிறந்தவர் யார்?' என்று கேட்கப்பட்டது. ''தாய்தான்'' என்று பதில் சொன்னார்கள். விடவில்லை! நான்காவது தடவையாக ''தாய் தந்தை இருவரில் சிறந்தவர் யார்? என்று கேட்டார்கள் ஸஹாபாக்கள். ''தந்தை'' என்று பதில் அளித்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் மூன்று முறையும் தாய் என்று சொல்ல ஒரேயொரு முறை மட்டும் தந்தை என்று சொன்னதால் தத்துவம் என்ன? குழந்தையின் மீதுள்ள பொறுப்பும் கடமையும் தாய் தந்தை இருவரையும் சார்ந்தது என்றாலும் அவ்வித பொறுப்பு நான்கு மடங்கு என்று வைத்துக் கொண்டால், அதில் மூன்று பங்கு சிறப்பை தாயும் ஒரு பங்கு சிறப்பைத் தந்தையும் அடைகிறார்கள்.

எப்படியெனில் - கரு உருவானபின் அதை தன் வயிற்றில் ஏந்திக் காப்பாற்றித் தருவதில் ஏற்படும் இன்னல்களைத் தாங்கித் தருபவளும், சகித்துக்கொள்பவளுமாய் தாய் ஆகிறாள். அந்தத் தாய் உதிரத்தையே பாலாக மாற்றி குழந்தைக்கு ஊட்டும் தியாகத்தைச் செய்கிறாள்.

அந்தத் தாய் குழந்தையை வளர்ப்பதில் தந்தையை விட, இதயபூர்வமான முழு அன்பை குழந்தை மீது செலுத்துபவள் ஆகிறாள் அந்தத் தாய் - கருவைக் காப்பாற்றுவது பாலூட்டுவது அதிக அன்பு செலுத்துவது ஆகிய மூன்று சிறப்புக்களை அடைந்திருக்கும்போது தந்தை என்பவனோ, அக்குழந்தை உருவாவதற்கு மூல புருஷன் ஆன ஒரே சிறப்பை மட்டுமே பெறுகிறான்.

ஒரு காய்கறிப் பையை மார்க்கெட்டில் இருந்து வீடுவரை சுமந்து கொண்டு வரும் பொறுமை இல்லாதவனாய் ஒரு ஆண் இருக்கிறான். பெண்ணோ உண்ணும் போதும் உறங்கும் போதும் இப்படி சதா காலமும் பொறுமையுடனும் இன்முகத்துடனும் அடிவயிற்றில் சுமப்பவளாய், பொறுமைசாலியாய் இருக்கிறாள். அப்படி அவள் சுமப்பது ஒருநாள் அல்ல, இருநாள் அல்ல, பத்துமாதங்கள்!

இப்படிச் சுமப்பதற்கு எத்தனை சகிப்புத்தன்மையையும், தியாக மனப்பான்மையையும் உடையவளாய் அவள் இருக்க வேண்டும் என்பதால் தான்.

'பொறுமையில் சிறந்த பூமியும் உண்டு
பூமியை மிஞ்சும் தாய்மையும் உண்டு'
என்கிறார்கள்.

தாய்ப்பாசம் கல்லையும் கரையச் செய்து விடுகிறது. தாயின் பிரிவு முற்றும் துறந்த முனிவனைக் கூட முட்டி அழ வைத்திருக்கிறது.

பிறவியில் உயர்ந்த பிறவி மானிடப்பிறவி. அந்தப் பிறவி பிறப்பதற்கு தவம் செய்திருக்க வேண்டும். ஆனால் அந்த மங்கையராகப் பிறப்பதற்கு தவத்தில் சிறந்ததான மாதவம் செய்திருத்தல் வேண்டும் என்கிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்.

மங்கையராகப்
பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட
வேண்டுமம்மா

நன்றி: மங்கை

### அழகான பெண்

'அழகுக்காக மட்டும் ஒரு பெண்ணை மணப்பது அடித்திருக்கும் பெயிண்டுக்காக மட்டும் ஒரு வீட்டை வாங்குவதைப்போல.'

— ஒரு ஆபிரிக்கப் பழமொழி —

நங்கை

# போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

ஒரு ஊரில் குடியானவன் ஒருவன் இருந்தான், அவன் பரம ஏழை. ஒரு வேளை உணவுக்காக அவன் மிகவும் கஷ்டப்பட்டான்.

ஒரு நாள் விறகு வெட்டுவதற்காக காட்டினுள் நுழைந்தான். அது நண்பகல் நேரமானதால் மிகவும் களைப்புற்றிருந்தான். அதனால் அவன் ஆலமரமொன்றின் நிழலிலே சற்று இளைப்பாறினான்.

அந்த ஆலமரத்திலே ஒரு தேவதை வசித்து வந்தது அவன் மேல் இரக்கங் கொண்ட அந்தத் தேவதை ''ஏ' குடியானவனே! உனது வறுமையைப் போக்க நான் ஒரு வழி சொல்கிறேன். கேட்பாயா?'' என்றது.

அது கேட்ட குடியானவன் ஆச்சரியத்துடன், ''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினயமாகக் கேட்டான்.

''இந்த மரத்தின் அடியிலே 6 ஜாடி நிறைய தங்கக் காசுகள் இருக்கின்றன. அவற்றை நீ எடுத்துக்கொள். அதைக் கொண்டு சுகமாக வாழ்வாயாக'' என்றது தேவதை

ஆனந்தப் பரவசத்தில் ஆழ்ந்தான் அந்தக் குடியானவன். அவசர அவசரமாக நிலத்தைவெட்டினான் தேவதை கூறி

**இ. ஸ்ரீதரன்**

யது போல் 6 ஜாடிகளில் தங்கக் காசுகள் இருந்தன.

ஆனால் ஆறுவது ஜாடியில் மட்டும் சற்றுக்குறைவாகவே காசுகள் இருந்தன. அதைக் கண்ட குடியானவன் மிகுந்த கவலை கொண்டான்.

தான் தினமும் உழைக்கும் பணத்தைச் சாப்பாட்டுக்குக் கூடச்செலவு செய்யாமல் அந்த ஜாடியை நிறைக்கவேண்டுமென்று எண்ணினான். பார்த்தீர்களா? இத்தனை நிறைந்த செல்வம் கிடைத்தும் அவனால் அதை அனுபவிக்கமுடியவில்லை. போதாது போதாது என்று இன்னும் சேர்க்க எண்ணினானேயொழிய இருப்பதைக் கொண்டு திருப்தி அடையவில்லை.

கிடைத்தது போதும் என்று எண்ணி வாழ்ந்திருந்தால் அவனால் சுகமாக வாழ்ந்திருக்க முடியும் வனதேவதை தங்கக் காசுகள் கொடுத்தும் அவன் சமாதானம் அடையவில்லை.

தனது வறுமையைப் போக்கி செல்வந்தனாகவும் சுகதேகியாகவும் வாழ்ந்திருக்கலாம் தானே; 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்றபடி நாம் வாழத் தலைப்பட வேண்டும்.

எனவே, உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனோ நிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறுவர் சோலை

### சில உயிரினங்கள் பற்றி

● மரங்கொத்தி தனது கண்களை அசைக்காது தன்னைச் சூழவுள்ள பொருட்களை பார்க்கும் சக்தி கொண்டது.

● யப்பானின் மிருக வளர்ப்பு அதிகாரிகளால் வளர்க்கப்பட்ட ஒன்காடொரி இனச் சேவலின் வாலின் நீளம் 15 அடி ஆகும்.

● 10 கோடி ஆண்டுகளுக்கு முன் அவுஸ்திரேலிய கடல் பிராந்தியத்தில் திரிந்த கடல்பாம்பு 85 அடி நீளமானது. தலை மட்டும் பதினென்றரை அடி என கூறப்படுகிறது.

● ஸ்லோத் எனும் விலங்கு வாழ்நாள் முழுவதும் தலைகீழாகவே தொங்கிக் கிடக்கும்.

● உலகிலேயே மிகவும் உயரமான நாய் அமெரிக்காவைச் சேர்ந்த டெனிஸ் நாயாகும். உயரம் 41 அங்குலம்.

தி. தவபாலன்
யாழ். மத்திய கல்லூரி

### நாடுகளும் தலைநகர்களும்

| | | |
|---|---|---|
| 1. அவுஸ்திரேலியா | — | கன்பேரா |
| 2. மேற்கு ஜேர்மனி | — | பொன் |
| 3. சவூதி அரேபியா | — | றியாட் |
| 4. ஆர்ஜன்டீனா | — | புவனர்ஸ் அயர்ஸ் |
| 5. லிபியா | — | திரிப்போலி |
| 6. சூடான் | — | காட்டூம் |
| 7. நோர்வே | — | ஒஸ்லோ |
| 8. ஈரான் | — | தெஹ்ரான் |
| 9. ஈராக் | — | பாக்தாத் |
| 10 தென் ஆபிரிக்கா | — | கேப்ரவுண் |
| 11. லெபனான் | — | பெய்ரூட் |
| 12. எகிப்து | — | கெய்ரோ |
| 13. சுவிட்ஸ்லாந்து | — | ஜெனீவா |
| 14. சீனா | — | பீக்கிங் |
| 15. கனடா | — | ஒட்டாவா |

செல்வி த. பிரியானந்தி
கொக்குவில்

### சிறைப் . . .

(4ஆம் பக்க தொடர்ச்சி)

இடத்தை விட்டு எழுந்து கடிதத்தை அவசரம் அவசரமாக நெஞ்சுச்சட்டைக்குள் செருகிக் கொண்டாள். மழைக்கு ஒரு குடையைப் பிடித்தபடி, கையில் ஒரு குடையுமாய் பூரணம் கோயில் வாசலுக்கு வந்தாள். அதற்குள் திலகமும் சிவனேசனும் வெளிவாசலுக்கு வந்து விட்டனர். இருவரையும் ஒருங்கு சேரக் கண்ட பூரணத்தின் முகம் சட்டென்று கறுத்தது.

ஏன் குடையை விட்டிட்டு வந்தனி?

அதற்குத் திலகம் பதில் கூற முற்பட்டாள்.

'சரி சரி வா!'

குடையைத் திலகத்திடம் நீட்டினாள் பூரணம்.

திலகம் குடையை வேண்டிக் கொண்டு பூரணத்தின் பின் சென்றாள். போகும்போது திரும்பிப் பார்த்தாள். சிவனேசன் கையை அசைத்தான்.

திலகம் புன்முறுவலுடன் தலையை ஆட்டிவிட்டு நடந்தாள்.

பூரணம் இதைக் கவனிக்கவில்லை.

ஆனால் அவளுடைய உள்மனதில் ஒரு பெரிய போராட்டம்!

'ஓ இப்படியோ சங்கதி! இதை விட்டால் பெரிய பிழை! இண்டைக்கு அவரிட்டை விஷயத்தைச் சொல்லி இதுக்கு ஒரு முடிவு எடுக்க வேணும்...!'

தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வீடு திரும்பும் வரையும், திரும்பிய பின்னரும் பூரணம் திலகத்திடம் இது பற்றி ஒன்றுமே கதைக்கவில்லை.

ஆனால் திலகத்துக்கோ மனம் என்றுமில்லாத வாறு பரபரப்புமாய் அங்கலாய்ப்புமாய் திரிந்தாள்.

இனம் புரியாத ஒரு உணர்வு ஒன்று அடிவயிற்றைப் பிசைந்தது. காரணம் இல்லாத அவஸ்தைக்கு ஆளாகித் தவித்தாள்.

[ தொடரும் ]



ஸ்டைல் நடிகர்

# தமிழ்ப்படங்களில் நடிப்பதற்கே ராதாவுக்கு அதிக விருப்பமாம்!

''தெலுங்குப் படங்களில் நடிப்பதைவிட தமிழ்ப்படங்களில் நடிப்பதையே நான் அதிகம் விரும்புகிறேன்''

திரையுலக வட்டாரங்களில் மாறான சில கருத்துக்கள் நிலவுவது பற்றி குறிப்பிடுகையிலேயே ராதா இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் இது பற்றி விளக்குகையில்,

இப்போது தமிழில் ''அம்மன் கோயில் கிழக்காலே'', ''மனக்கணக்கு'' ''மெல்லத் திறந்தது கதவு'' ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன்.

இதைவிட சத்யா மூவிஸாரின் இரண்டு புதிய படங்களில் கமல், சிவகுமார் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியும் உள்ளேன்.

நான் தமிழை இரண்டாம் பட்சமாக நினைத்திருந்தால் இவ்வளவு படங்களை ஒப்புக் கொண்டிருப்பனோ? நான் தமிழ்ப் படங்களில் நடிப்பதையே அதிகம் விரும்புகிறேன்.


ஜிதேந்திராவின் ஜோடியாக இந்திப் படம் ஒன்றிலும் நடித்து வருகிறேன். இந்தப் படம் ஒரே நேரத்தில் தெலுங்கு, இந்தி ஆகிய இரண்டு மொழிகளில் தயாராகிறது

தெலுங்கில் எனக்கு ஜோடியாக நடிக்கும் கிருஷ்ணாவே படத்தை இயக்குகிறார்.

நல்ல படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கும் நிறைய உண்டு.

இப்போது மலையாளத்தில் ''ரேவதிக்கு பாவக்குட்டி'' என்ற படத்தில் கோபியுடன் நடிக்கிறேன்.

தெலுங்கில் பன்னிரண்டு படங்களில் நான்கு படங்கள் வெளியாகத் தயாராக உள்ளன. மற்றைய படங்களின் படப்பிடிப்புகளில் ''பிஸி''யாக நடித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் ராதா.



## ரஜனிகாந்த் தெலுங்கில் 'ஜீவன போராட்டம்'

தமிழ்த் திரையுலகின் ஸ்டைல் நடிகர் ரஜனிகாந்த். ஏன், தமிழில் ரஜனி சூப்பர் ஸ்டாரும் கூட.

ஆனால் தெலுங்கில் அப்படியல்ல தெலுங்கில் அவர் நடித்த படங்கள் எதுவும் பிரமாதமாக ஓடவில்லை.

'அமர் அக்பர் அந்தோனி'யின் தெலுங்குப் பதிப்பான 'ராம் ராபர்ட் ரஹீம்' என்ற படத்தில் நடித்தார். அதன் பின் 'நான் போட்ட சவால்' தமிழிலும், தெலுங்கிலும் தயாரகியது. தெலுங்குப் பதிப்பு படுதோல்வி அடைந்தது.

'தில்லு முல்லு' தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் தயாராகியது. தமிழில் மட்டுமே படம் வெளியானது. தெலுங்கில் வியாபாரமே ஆகவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், அதாவது ஏழு வருடங்களுக்குப் பிறகு 'நான் சிகப்பு மனிதன்' தெலுங்குப் பதிப்பில் பாக்கியராஜ் வேடத்தில் ரஜனி நடித்து படம் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

இப்போது 'ஜீவன போராட்டம்' என்ற தெலுங்குப் படத்தில் தாசரி நாராயணராவ் டைரக்‌ஷனில் நடிக்கிறார் ரஜனி.

இந்தப் படம் இந்தியில் வெளிவந்த 'ரொட்டி கப்டா அவுர் மக்கான்' வெற்றிப் படத்தின் தழுவலாகும்.

இதில் ரஜனிகாந்துடன் சோபன்பாபு, சரத்பாபு, விஜயசாந்தி, ராதிகா, ஊர்வசி ஆகியோரும் நடிக்கிறார்கள். தமிழிலும் 'டப்' செய்யப்படுகிறது 'ஜீவன போராட்டம்.'

ரஜனிகாந்துக்கு படம் 'ஜீவன போராட்ட'மாக இருக்குமோ என்னவோ!

## 25,000 ரூபா செலவில் கே. ஆர். விஜயாவுக்கு நகை

'மகாசக்தி மாரியம்மன்' படத்தில் மூன்றே நிமிடம் வரும் ஒரு காட்சிக்கு நகை, ஆடைகளுக்காக இருபத்தையாயிரம் ரூபா செலவிடப்பட்டதாம்.

படத்தில் இந்த நகை, ஆடைகளை அணிந்து அம்மனாக நடிக்கிறார் கே. ஆர். விஜயா.

இப்படத்தை இயக்குநர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தயாரிக்கிறார்.

பெரும் பணம் செலவு செய்து, பிரமாண்டமான முறையில் இப்படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார் அவர்.

சமீப காலத்தில் இந்த அளவுக்கு வேறு எந்தப் படத்திற்காகவும் உடை அலங்காரத்திற்காகப் பணத்தைப் பல்லாயிரக் கணக்கில் செலவிட்டிருக்க வாய்ப்பே இல்லை என்று சவாலாகச் சொல்கிறார் கே.எஸ். கோபாலகிருஷ்ணன்

## ராதிகாவின் கோபம்; தயாரிப்பாளருக்கு நட்டம் 4 ஆயிரம் ரூபா

அன்று 'சிறைப் பறவை' படத்துக்கு ஏ. வி. எம். (ஆர். ஆர்) தியேட்டரில் 'டப்பிங்' வேலை.

ராதிகாவின் 'கால் ஷீட்' நேரம் 5 மணி முதல் 6-30 வரை.

குறிப்பிட்ட நேரத்துக்கு 'டப்பிங்' தியேட்டருக்கு வந்தார் ராதிகா. ஆனால் டைரக்டர் மனோபாலா தியேட்டரில் இல்லை.

ராதிகா வந்து விட்டார் என்ற செய்தி பறந்தது டைரக்டருக்கு. 'இதோ பதினைந்து நிமிடங்களில் வந்து விடுகிறேன்' என்று டைரக்டரிடம் இருந்து பதிலும் வந்தது.

ராதிகா சரியாகப் பதினைந்து நிமிடங்கள் காத்திருந்தார். 'ஊஹூம்' டைரக்டர் வரவில்லை. வந்தது கோபம். காரில் ஏறிப் பறந்தார் வீட்டுக்கு.

டைரக்டர் வந்தார். செய்தி அறிந்து ராதிகா வீட்டுக்குப் போன் செய்தார். 'நான் வரும்வரை காத்திருக்கக் கூடாதா?' என்று கேட்டார்.

'நான் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து விட்டேன். நீங்கதான் அங்கு இல்லை. எனக்கு ஏழு மணிக்கு தெலுங்குப் படப்பிடிப்பு. இனிமேல் என்றால் வரமுடியாது' என்றார் சூடாக ராதிகா.

அன்றைய 'டப்பிங்' நடக்காததால் தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா நாலாயிரம்!

தயாரிப்பு
பேரின்பம்

வெள்ளித் திரை

## சிவாஜி - ஜெய் திடீர் 'சேஞ்ச்'

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தமது நாற்பது ஆண்டுப் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

ஆம்! இப்போது சிகரெட் புகைப்பாதை அறவே நிறுத்தி விட்டார் அவர்.

அண்மையில் வைத்திய பரிசோதனை மேற்கொண்டதன் விளைவே இது.

செயின் ஸ்மோக்கரான ஜெய் சங்கரும் படிப்படியாக சிகரெட் புகைப்பதை குறைத்துக் கொண்டு வருகிறாராம்.

வைத்திய பரிசோதனையின் விளைவோ அல்லது [illegible] நடவடிக்கையோ இது என்பது தெரியவில்லை.

## திரை உலகில்

தயாரிப்பாளர் எஸ். எஸ். கருப்பசாமியின் புதிய படத்தை இயக்கப் போகிறார் எஸ். ஏ. சந்திரசேகரன். இவரது டைரக்‌ஷனில் முதன் முறையாக சிவாஜிகணேசன் நடிக்கிறார்.

★

''கூப் சூரத்'' இந்திப் படத்தைத் தமிழில் தயாரிக்கிறார் 'இந்து' ரங்கராஜன். [illegible] பாத்திரத்தில் சிவாஜியும் ரேகாவின் பாத்திரத்தில் ரேவதியும் நடிக்கப் போகிறார்கள்.

★

பாண்டியனுக்கு பத்திரிகைகளில் வரும் 'கிசு கிசு'வை படிப்பதில்தான் ஆர்வம் அதிகமாம். இப்போது பத்திரிகைகளில் 'கிசு கிசு' குறைந்து விட்டதால் பொழுது போவது கஷ்டமாக இருக்கிறதாம்.

## நட்சத்திர முகவரிகள்

ஜெய்சங்கர்
9, காலேஜ் லேன்,
சென்னை - 6

விஜயகுமார்
5, முதல் குறுக்குத்தெரு,
லேக் ஏரியா,
சென்னை - 34

மாதவி
23, சரஸ்வதி தெரு,
மகாலிங்கபுரம்,
சென்னை - 34

ஊர்வசி
27, 86 வது தெரு,
19 வது அவெனியூ,
அசோக் நகர்,
சென்னை - 83

ஜெய்கணேஷ்
6, ராஜா தெரு,
மந்தைவெளி,
சென்னை - 28

சரத்பாபு
36, வடக்குத் தெரு,
ஸ்ரீராம் நகர்,
சென்னை - 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

ச.பொ.த.ப. [சாதா]

இயற்கையின் இன்னிசை வெளிப்பாடுகளில் தன்னுள்ளத்தைப் பறிகொடுத்த மனிதன், நாளடைவில் தன்னுணர்வுகளின் வெளிப்பாட்டை எழுதாக்கவிகள் மூலம் நிறைவேற்றிக் கொண்டான். இன்பத்திலும் துன்பத்திலும் மட்டுமல்ல. தம் ஆசைக்கனவுகளில் நம்பிக்கை நட்சத்திர மின்னலில். கருத்தொருமித்த காதலுணர்வுகளில், அலுப்பூட்டும் தொழில்வேலைகளில் உள்ளத்துணர்ச்சிகளின் பிரவாகவேகத்தில் நாட்டார் இலக்கியம் மலர்ந்தது. மணம் வீசியது.

மக்கள் வாழ்க்கையின் ஜனனத்தில் தொடங்கிய பாடல், மரணத்தில் முடிவடைகின்றது. பிறக்கும் போதும், இறக்கும் போதும் அழுகின்ற மனிதன் இசையையும் மீட்டுகின்றான். என்னே அதிசயம்! என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

மனிதனின் பிறப்பின் போது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். மருத்துவிச்சியின் வாழ்த்துப் பாடலில் பரந்த நோக்கு புலப்படுகின்றது. ஏனெனில் பிள்ளையின் வரவால் அயலும் புடையும், அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும் என வாழ்த்தியவள் தன் வாழ்த்திற்குச் சிகரம் வைத்தாற்போல் 'ஊர் வாழ தேசம் வாழ' என வாழ்த்துகின்றாள்.

மருத்துவிச்சியின் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கிய மக்கள் வாழ்க்கை, அடுத்து அன்னையின் தாலாட்டில் அரவணைக்கப்படுகின்றது.

# ஏட்டிலக்கியத்தை எட்டிப்பிடிக்கும் எழுதாக்கவி: நாட்டார் பாடல்கள்

தாய்மொழியைத் தன் பாலோடு குழைத்தூட்டும் அன்னை, தன் மழலை எத்தகைய இயல்புகளோடு உலகில் வாழ வேண்டும் என்னும் எதிர்பார்ப்புகளைத் தாலாட்டுப் பாடல்களில் புலப்படுவதுடன், குழந்தையால் தான் பெற்ற சிறப்புக்களைப் பெருமையுடன் கூறி அக் குழந்தைக்கு நல்லுரையும் புகட்டுகின்றாள்.

ஆண்பிள்ளையின் நுங்கு, அணில் கோதா மாம்பழம், கட்டிப் பசும்பொன், கொத்து மரிக்கொழுந்து, முத்திலே முத்தான குழந்தை, மலடியென்று மானிலத்தோர் ஏசாமல் பிள்ளைக் கலிதீர்க்கப் பிறந்தது என ஆறுதலடைகின்றாள் தாய்.

குழலினிலும் யாழினிலும் இனிமைமிகு மழலை பேசி, நிலவைப் பிடிக்கக் கைநீட்டி நித்திரைசெய்ய அடம்பண்ணிய குழந்தை சிற்றில் கட்டி, சிறுசோறு சமைத்து விளையாடும் பருவத்தை அடைகின்றது. இப்பருவத்திற்கேயுரிய விளையாட்டுப் பாடல்களையும் வேடிக்கைப் பாடல்களையும் பாடி மகிழ்கின்றது.

'கடைக்குப் போனேன் வெத்திலை வாங்க-சந்தமாமா காசு கொடாமல் ஓடிவந்தேன் சந்தமாமா' எனத் தம் குறும்பின் பெருமை பேசி மகிழ்கின்றது.

விளையாட்டுப் பருவத்தில் வேடிக்கையாகத் தம் காலத்தைப் போக்கிய சிறுவன் மானிடம் பருவத்தின் இனிய பருவமான இளமைப் பருவத்தை எட்டிப் பிடிக்கின்றான்.

கன்னியும் காளையும் காதல் வயப்படுகின்றனர். காதற் பாட்டுக்களில் காலங் கழிக்கின்றனர். காவற் பரசலிற் கண்ணுறங்கும் வேளையிலும் கண்ணான மச்சி வந்து காலான்றக் காணும் காதலனும், 'வாவென்றழைப்பேன் மச்சான் வாசலிலே பாய் தாறுவேன், வாப்பா அதிஞ்சா எண்டால் வாளெடுத்து விசிடுவார்' எனத் தந்தைக்கு அஞ்சித் தன் ஆசைக் கனவினை கூறிடும் காதலியும்.

'பூமியைக் கீறியல்லோ புல்லா முளைத்தாயானல் காராம்பசு வேடங் கொண்டு கடித்திடுவேன் அந்தப் புல்லை' எனத் தம்மை மறந்து சல்லாபிக்கின்றனர்.

**★ த. முத்துக்குமாரசாமி ★**

[ பி. ஏ டிப்ளோபா ]


ஆசிரியர், நாவற்குழி தமிழ் மகா வித்தியாலயம்

இவ்வாறு பருவந்தோறும் தொடரும் எழுதாக்கவி தொழில் வேளையிலும் விலகி நிற்கவில்லை. ஏர் தழைக்க வேணும் தம்பிரானே எல்லோரும் வாழ வேணும் தம்பிரானே என தம் தொழிலுக்கு இறைவனைத் துணைக்கழைத்தவர்கள் வேடிக்கைப் பாடலில் தம் சிரமத்தை மறந்து ஆடிப் பாடி வேலை செய்து 'முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப் பணம் வாங்கு அதை மூன்று நாளில் தின்டு விட்டுக்கடனையும் வாங்கு பாக்கி நாளில் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி மனப் பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம், என உடல் நலுங்கா உத்தியோகத்தின் இழிவை உணர்த்தித் தொழில் மகத்துவம் பேசுகின்றனர்.

ஈற்றில் நீரிற் குமிழி போற் தோன்றிடும் நிலையற்ற வாழ்வின் முடிவிலே, அன்னையின் மடியில் தொடங்கிய வாழ்வு மண்ணில் முடிகையில் ஒப்பாரிப் பாடலுடன் மனிதன் வாழ்வில் பின்னிப்பிணைந்த எழுதாக் கவியும் விடை பெறுகின்றது.

இந்த உலகம் யாருக்கும் சதமில்லையே இங்கே யாரும் நிலைத்து வாழ்ந்தோரில்லையே என நிலையாமைக் கருத்தைப் புலப்படுத்தி அறிவுரையும் புகட்டுகிறது.

ஏட்டிலக்கியத்தின் சம அந்தஸ்தை எட்டிப் பிடிக்கும் எழுதாக்கவி பாமர மக்களின் இலக்கியமாக அமைந்திருப்பினும் மக்கள் வாழ்க்கையின் ஆரம்பம் தொட்டு முடிவுவரை பின்னிப் பிணைந்து காணப்படுவதுடன் நல்லுரைகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.




# கல்வி பற்றி மேலை நாட்டு மேதைகள்

'வாழ்க்கையைப் பயிலும் சாதனமே கல்வி' (Willmott உவில்மொற் - 1862 ஆம் ஆண்டு, வாழ்வு நீத்த அமெரிக்கக் கல்விமான்)

'படிவக் கற்களைக் கொண்டு சிலையைச் செதுக்குவது போன்றே கல்வி, ஆன்மாவைப் பக்குவப்படுத்தும். ஒரு பாமரனுள் கரந்துறையும், தத்துவஞானி, மெய்யடியான், வீரன் விவேகி, குணசீலன், மேதை ஆதியோரை, கல்வி அகழ்ந்து அரங்குக்கு அழைந்து வந்திருக்கலாம்'

Addison அடிசன் - (1672 - 1719) - ஆங்கில எழுத்தாளன்)

'ஒழுக்கத்தை மேற்கொள்ளவைப்பதே கல்வியின் நல்நோக்காகும். மற்றவரின் பேறுகளைக் கொண்டு உள்ளத்தை நிரப்புவதைவிட, அதன் ஆற்றலைப் பயன்படுத்தப் பயிற்றுவதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்'.

(Tryon Edwa.ds) - இற்றையொன் எட்வேட்ஸ் [1809 - 1894] அமெரிக்க மதக் கல்விமானும் செய்தித்தாள் ஆசிரியரும்)

'எதை எண்ணவேண்டும் என்பதைக் காட்டிலும், எங்ஙனம் எண்ண வேண்டும் என்பதை எடுத்துரைப்பதையே கல்வியின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். மற்றவர்களின் சிந்தனைகளால் எமது நினைவை நீடிக்காது, நாமே சுயமாகச் சிந்திக்க உள்ளத்தை உயர்த்துவதே, கல்வியின் கொள்கை'.

(Beattie - பியாற்றி [1735 - 1803] ஸ்கொற்லாந்துப் புலவன்)

க. கயிலாயநாதன்

(முதல்வர், கலாநிலையம், வட்டுக்கோட்டை முன்னாள் ஆங்கிலப் போதனாசிரியர்)

## கலியுக காதலிக்கு ஓர் கடிதம்

இறந்தகால
என்
இனிய காதலியே!
இன்று
உன்னை
நான்
மனப்பூர்வமாக
வெறுக்கிறேன்
ஆனாலும் -
அந்த
பசுமையான
பழைய நாட்களை
இன்னும்
நேசிக்கிறேன்
உன்னிடம்
பாடம் பயின்ற
நாட்களல்லவா அவை!
வாழ்வின்
சந்தோஷங்களை
மட்டுமே
சந்திக்க எண்ணி —
காதலைப் பற்றியே
கனவுகள் வளர்த்து —
வாழ்ந்தேன்.
என்
மன நிலத்தில்
காதல்ப்பயிர் வளர்த்த
நீயே
பின்னர்
அதைக் காலால்
மிதித்தழித்தாய்
இக்கலியுகத்தில்
காதலெல்லாம்
வெறும்
கானல் நீரே
என்றுணர்த்திவிட்டு
நீ
காணமல் போய்
விட்டாய்
வாழ்வின்
உண்மை நிலையை
உணர்த்திய
உனக்கு
என்
நன்றிகள்.
உன்னிடம்
இந்தப் பாடம்
நான்
பயின்றிராதிருந்தால்
இன்னும்
அந்த
கனவுப் பாலையிலேயே
என்
காலத்தைக்
கழித்திருப்பேன்.
இக்காலத்தையும்
மறந்து
உன்
காலடியிலேயே
கிடந்திருப்பேன்.
உன்
தேகத்தையே
எண்ணி எண்ணி
என்
தேசத்தையே
மறந்திருப்பேன்.

விவேக்

# புற்று நோய்: சில அறிவுரைகள்

புற்றுநோய் என்றால் என்ன? இதனை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு, எமது உடலமைப்பைப் பற்றி முதலில் அறிந்து கொள்ள வேண்டும். கலம் என்பது உடலை உருவாக்கும் அடிப்படைப் பொருளாகும். (கட்டிடத்திற்கு கொங்கிறீற் கல்லைப்போல் என சோல்லலாம்.) பல கலங்கள் கலத்திடைப் பாய் பொருளால் இணைக்கப்பட்டு இழையங்களை உருவாக்கும் இவ்விழையங்களின் சேர்க்கையால் அங்கங்கள் உருவாகின்றன.

கலம், இழையம், அங்கம் ஆகியன வெவ்வேறு தொழில்களைப் புரிவதற்காக, வேறுபாடமைந்து சிறப்படைந்துள்ளன. கலங்களுக்கு உதாரணமாக: மேலணி இழையக்கலங்கள் — பாதுகாப்புத் தொழில் புரிபவை; சுரக்கும் இழையக்கலங்கள் சுரக்கும் தொழிலைப் புரிபவை; தொடுப்பிழையக் கலங்கள் (உறுதியை அளிப்பவை); தசையிழையக் கலங்கள் (தசைச் சுருக்கத்தை ஏற்படுத்துபவை); நரம்பிழையக் கலங்கள் (கணத்தாக்கங்களை கடத்துபவை); செங்குருதிக்கலங்கள் ஒட்சிசனையும் (பிராணவாயு), வேறு பதார்த்தங்களையும் கடத்துபவை; வெண்குருதிக்கலங்கள் (நோயை எதிர்த்து நிற்பவை) ஆகியவற்றைக் குறிக்கலாம். இழையங்களுக்கு உதாரணங்கள்: மேலணி இழையம் தொடுப்பிழையம், தசையிழையம், குருதி, நிணநீர் என்பனவாகும். அங்கங்களுக்கு உதாரணங்கள்: இருதயம், மூளை, ஈரல், சிறுநீரகம், இரப்பை, நுரையீரல் கருப் (நுகப்) பிரிவின் ஆரம்பத்திலிருந்தே, கலப்பிரிவானது சீராக நடைபெற்று உடலில் வெவ்வேறு கலங்கள், இழையங்கள், அங்கங்கள் சீரானமுறையில் உருவாகின்றது.

இவ்வாறாக உருவான உடலின் அமைப்புக்கள் பயன்படத்தக்க முறை சீராக தொழிற்படுகின்றன. சில வேளைகளில் வெவ்வேறு காரணங்களின் நிமித்தம் (உ-ம்- கர்ப்பமாக இருக்கும் காலத்தில் தொற்று நோய் ஏற்படல், சில மருந்துவகைகள் பாவித்தல், கதிர் வீசலுக்கு உட்படல்) உடலில் மாற்றங்கள் ஏற்படலாம். உடலில் சாதாரணமாக உருவாகிய கலங்கள் அழிவதாலும், புதிய கலச் சேர்க்கையாலும், தொடர்ச்சியான ஒரு திருத்தம் நடைபெற்று வருகின்றது. (இது நரம்புக்கலங்களில் நடைபெறுவதில்லை)

பின்பு கூறப்படும் சில காரணங்களால் சிலரில் கலப்பிரிவிலும், வளர்ச்சியிலும் மாற்றம் ஏற்பட்டு, புதிய வளர்ச்சிகள் உருவாகலாம். இவ்

## உருவாகும் கலங்களின் தன்மையை பொறுத்து புற்றுநோய் வகை வேறுபடும்

வளர்ச்சிகளில் சில வடிவம், பருமன், அடுக்கப்பட்ட ஒழுங்குமுறை, சாதாரண கலங்களை ஒட்டியும், உடலுக்கு பாதிப்பு விளைவிக்காதவையாகவும் உள்ளன. இவற்றில் சில காலத்தில் சில வேளைகளில் தீங்கு விளைவிக்கக்கூடியதாக மாறலாம். புது வளர்ச்சிகளில் மற்றும் சிலவற்றில் இருந்து எழுவதை ஒட்டி, வெவ்வேறு வகைகளாகும். உ. ம்- ஸ்குவேமஸ் காசினோமா ஆனது. தோல், களம், (உணவுக் குழாய்) வாய் முதலியவற்றின் மேலணியிலிருந்து உருவாகின்றது. அடினோகாசினோமா இரைப்பை, சதையி, ஈரல் என்பவற்றிலிருந்து உருவாகின்றது. ரான்சிசனல் கலம் காசினோமா சிறுநீர்ப்பையிலிருந்தும், ஒஸ்ரியோசாக்கோமா லிம்போ சாக்கோமா பைபிரோசாக் கோமா என்பன முறைநே எலும்பு, நிணநீர்க்கலங்கள், நார் கலங்களிலிருந்து உருவாகின்றன. இலுக்கிமியா, வெண்கலங்களிலிருந்து உருவாகின்றது. இவற்றைவிடவேறு பலவகைகளும் இலகுவில் கிருமித்தாக்கம் ஏற்பட்டும் சில, புற்றுநோய்க் கட்டிகள் சுரக்கும் பதார்த்தங்களாலும் உடல் மெலிவு இரத்தச்சோகை ஏற்படலாம். களத்தில் ஏற்படும் புற்றுநோய் விழுங்கப்பட்ட உணவு உட்செல்வதைப் பாதிக்கும்.




ஆரம்பத்திலிருந்தே, கலங்கள், ஒழுங்கின்றி வெவ்வேறு பருமன் அமைப்பு ஆகியவற்றுடன் உருவாகி, அருகிலுள்ள இழையங்களைத் தாக்குவதுமல்லாமல் உடலின் வெவ்வேறு பாகங்களுக்கு பரவி உடல் தொழில்களைப் பாதிக்கவும் செய்கின்றன. இவ்வளர்ச்சிகள் தீங்கான வளர்ச்சிகள் அல்லது புற்றுநோய் என அழைக்கப்படுகின்றன.

**டாக்டர் வே. கிருஷ்ணராஜா**

சத்திர சிகிச்சை நிபுணர்

புற்றுநோயானது, அது உருவாகும் கலத்தை அடிப்படையாகக் கொண்டு பலவகைகளாகும் மேலணிக்கலங்களிலிருந்து உருவாகுபவை காசிநோமா என்னும், தொகுப்பு இழையக்கலங்களில் இருந்து உருவாகுபவை சாக்கோமா என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகள் மேலும் எவ்வெவ்வகை கலங்களில் காணப்படுகின்றன.

புற்று நோயானது அண்மையிலுள்ள இழையங்களுக்கு மட்டுமல்லாமல், வெவ்வேறு அங்கங்களுக்கும் குருதிக்குழாயினூடாகவும்- நிணநீர்க் குழாயினூடாகவும் பரவுகின்றது. இவ்வாறான பரவல், பொதுவாக நிணநீர்க்கணுக்கள் நெறி நுரையீரல், ஈரல், எலும்பு, மூளை என்பவற்றிற்கு நடைபெறுகின்றது.

புற்றுநோய் உடலுக்கு பலவழிகளால் கேடு விளைவிக்கின்றது. பொது விளைவுகளில், உடம்பு மெலிதல், இரத்தச்சோகை என்பன சில வாகும். (இவ்விளைவு எல்லா வகைகளிலும், வெவ்வேறு [illegible] மாட்டாது) புற்றுநோயின் வகையைப் பொறுத்தும், எந்த இடத்திலோ, அங்கத்திலிருந்தோ, எழுவதைப் பொறுத்தும் வெவ்வேறு விளைவுகள் ஏற்படும். உ. ம் உடல் மெலிவு, இரத்தச் சோகை பலகாரணங்களால் ஏற்படாலாம்; பசியின்மையால் உணவு எடுத்தல் அளவைக் குறைத்தும், உணவு உறிஞ்சப்படுவதில் மாற்றம் ஏற்படுவதாலும்,

பெருங்குடலில் எழும் கட்டி மலச்சிகலுக்கும், மலவாசலினூடாக இரத்தம், சீதம் செல்வதற்கு காரணமாகும். சிறுநீரகம், மூளை ஆகியவற்றில் ஏற்படும் கட்டிகள், முறையே கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதில் கஷ்டத்தையும், பாரிசவாதம், கண் பார்வைக் கோளாறு, தலையிடி, வேறுகோளாறுகளையும் ஏற்படுத்தலாம். பரவல் நேரிடும் பொழுது குருதிக் குழாய்களையும், நரம்புகளையும் பாதிப்பதால் இரத்த இழப்பு நோ ஏற்படும். சில புற்றுநோய்கள் ஓமோன்கள் சுரப்பதால் விளைவு ஏற்படும். [illegible] பரவல' நுரையீரல், ஈரல், எலும்பு, மூளை அங்கங்களின் தொழில்களை பாதித்து கேடு விளைவிக்கின்றன.

புற்றுநோய் உடலுக்கு ஏற்படுத்தும் தீங்குகளின் உக்கிரம், பல காரணிகளில் தங்கியுள்ளது. இவ்வுக்கிர வேறுபாடு, புற்றுநோய் எவ்வகை மற்றுமல்லாது, ஒரேவகை வெவ்வேறு நோயாளியின் உடல் நிலையைப் பொறுத்தும் ஏற்படும். புற்றுநோயின் வகை என்னும்போது பல அம்சங் சங்களைத் தங்கியுள்ளது; உருவாக்கப்பட்டுள்ள கலத்தின் வகை அக்கலங்களின் படிவத்திலும் பருமனிலும் ஏற்பட்ட மாற்றத்தின் அளவு, புற்றுநோய் கட்டி வளரும் வீதம், உடலில் உருவாகிய அங்கம், ஏனைய உடற்பாகங்களுக்கு பரவியுள்ள அளவு, இவை யாவற்றையும் அடங்கியுள்ளது உ. ம் சாக்கோமா குறைந்த வயதிலேயே தோன்றி விரைவில் பரவி காசினோமாவை விட அதிகளவில் தீங்கு விளைவிக்கும். காசினோமா என்பவற்றிலேயே சில ஏனையவற்றை விட அதிகளவில் தீங்கு விளைவிக்கும். உ. ம் ஈரலில் உண்டாகும் காசினோமா மார்பில் ஏற்படும்காசினோமாவைவிட கூடிய தீங்கு விளைவிக்கும். நிறம் கூடிய தோலில் உருவாகும் புற்றுநோய் நிறம் குறைந்ததை விட கூடிய விளைவை ஏற்படுத்தும்.

புற்றுநோயானது பல பல வகையாகவுள்ளது. வெவ்வேறு வகைகள் வெவ்வேறு மனிதரில், வெவ்வேறு விளைவுகளை உருவாக்கிறது.

(வளரும்)

## கவலைகள் எல்லைக்குள்ளே

வீர விதைகளை
விதைத்த பூமியில்
துயரக் களைகள்
தோன்றி
வளர்ந்ததால்
சமூக மரத்தின்
மனித இலைகள்
சோகக் காற்றை
சுவாசிக்கின்றன
*
அந்த வயலின்
பரப்பில்......
மிருகத் தீயின்
நாக்கு நுனியில்
சமூக மரங்கள்
சமிபாடடையும்
*
இரும்புப் பூட்டின்
உருக்கு
உடல்கள்
இவைகளைச் சுற்றி
எல்லையாயிருக்கும்.

-பசுவூர்க் கோபி-

# குன்றக்குடிக்கு திரைப்பட இலக்கியத்திலும் ஆர்வம்!

இப்பகுதியில் வெளியிடுமாறு விமர்சகரும் கவிஞருமான நவாலியூர் நா. சச்சிதானந்தன் அனுப்பிய கருத்துக்களை வாசகருக்கு வழங்குகின்றோம்:-

அண்மையில், குன்றக்குடி அடிகளாரைப் பற்றிய முக்கிய தகவல்கள் சில 'சஞ்சீவி'யில் இடம் பெற்றிருந்தன. அதைப் படித்தபின் மிக அண்மையில் வேறு சில சுவையான தகவல்களும் கிடைக்கப் பெற்றன.

திருச்சி வானொலி நிலயம் அடிகளாரைப் பேட்டி கண்டபொழுது தம்மைப் பற்றிய சில தகவல்களை அடிகளார் கூறினார்கள்.

**திரைபட இலக்கியம்**

அடிகளார் திரைப்பட இலக்கியத்திலும் ஆர்வமுள்ளவர் என்பதைக் கேட்ட பேட்டியாவரே




அசந்து போய்விட்டார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு திரைப்படத்திற்காக எழுதிய 'இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே' என்ற பாடலும், கண்ணதாசன் எழுதிய 'சொல்லில் வருவது பாதி நெஞ்சில் தூங்கிக்கிடப்பது மீதி' என்ற பாடலும் தன்னை மிகவும் கவர்ந்ததாக அடிகளார் கூறினார்கள்.

'யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் எழு



திய 'சைவ வினாவிடை' மக்களிடையே இப்பொழுது பிரபல்யம் குறைந்து காணப்படுவதால் அதை மீண்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.

கோயில்கள் மக்களுக்கு உதவ வேண்டும்; மக்கள் கோயில்களுக்கு உதவ வேண்டும் என்பது எனது கருத்து எனது கிராமமாவ குன்றக்குடியில் மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதையும் வறுமையினின்று விடுவிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு நாம் உழைத்து வருகிறோம்.

இதன் பயனாகத் தனது பாணியில் இந்திய மத்திய அரசு இந்தியாவிலுள்ள கிராமங்களெல்லாவற்றையும் மேம்படுத்தும் நோக்குடன் 'குன்றக்குடித்திட்டம்' என்ற பெயரில் ஒரு தீவிரதிட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**அப்பர் அடிகளின் சோஷலிசம்**

சோஷலிசக் கருத்துக்கள் 7ஆம் நூற்றண்டிலேயே இந்தியாவில், அதுவும் தமிழ் நாட்டில் திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத்தின் வாயிலாகப் பரப்பப்பட்டது என்பதைக் கேட்ட பல கம்யூனிஸ்ட் நாட்டு அறிஞர்கள் வியப்புற்றார்கள் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற தேவாரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நாம் முயன்றால் தான் கடவுள் நமக்கு உதவுவார் கடவுள் தாமாகவே எமக்கு வலிந்து உதவ முன்வரமாட்டார் 'மனத்தில் நின்ற கருத்தானை; கருத்தறிந்து முடிப்பானை' என்ற தேவாரத்தின் மூலம் தான் எமது ஊர்மக்களை ஊக்குவித்து வருகிறேன். - இவ்வாறு அடிகளார் தனது பேட்டியில் கூறினர்.

- சுந்தரனார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிக மொழி பேசிய அதிசய பேராசிரியர்

230 மொழிகள் தெரிந்த பேராசிரியர் ஒருவர் 1787 – 1832 க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்.

கொபன்ஹேகனில் இவர் வாழ்ந்து வந்தார் பல்கலைக் கழகப் பேராசிரியரான இவருக்கு புதிய மொழிகளைப் படிப்பது என்றால் கற்கண்டு உண்ணுவது போலவாம்.

28 மொழிகளுக்கு அகராதிகள் உருவாக்கிய பெருமை படைத்தவர்.

சமஸ்கிருதம், சிங்களம், இந்துஸ்தானி உட்பட 28 மொழிகளுக்கான அகராதிகள் இவரால் தயாரிக்கப்பட்டன.

இப்பேராசிரியரின் பெயர் ராஸ்மஸ் கிறிஸ்டியன் ராஸ்க்

### அசுரத் தேங்காய்

40 இறாத்தல் நிறையுள்ள தேங்காய் காய்க்கும் தென்னைகள் சீசெல்ஸ் நாட்டில் தான் உள்ளன.

இந்தநாடு, இந்து சமுத்திரத்தில் உள்ளது.

### ஒரு ஓவரில் அதிக ஓட்டங்கள்

முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில், ஒரு ஓவரில் அதிக ஓட்டங்களைப் (36 ஓட்டங்களை) பெற்ற சாதனையாளர்கள் இருவர்.

ஒருவர் சேர் கார்பீல்ட் ஸோபர்ஸ். 1968 ஆம் ஆண்டு நொர்டிங்கம்ஷயருக்காக ஆடிய போதுகிளமோர்கனுக்கு எதிராக ஆறு ஸிக்ஸர்களை ஒரு ஓவரில் அடித்துச் சாதனை புரிந்தார்.

மற்ற சாதனையாளர் இந்தியரான ரவிசங்கர் சாஸ்திரி. 1985 ஜனவரியில் பம்பாய் அணிக்காக ஆடிய போது பரோடா அணிவீரர் திலக்ராஜின் ஒரு ஓவரில் ஆறு ஸிக்ஸர்களை அடுத்தடுத்து விளாசித் தள்ளினார் ரவி சாஸ்திரி.

## வைத்தியக் கலையின் ஆழ்ந்த ரகசியங்கள்

'வைத்தியக் கலையின் ஆழ்ந்த ரகசியங்கள் அடங்கியது'—

இது ஒரு புத்தகத்தின் தலைப்பு 100 பக்கம் கொண்ட இப்புத்தகத்தை ஒருவரும் திறந்து பார்க்க முடியாதபடி 'சீல்' செய்யப்பட்டிருந்தது.

டச்சு நாட்டின் பிரபல வைத்திய நிபுணர் டாக்டர் ஹெர்மன் போர்கேவ் 1738 இல் இறந்தார்.

அவரின் உடைமைகளுக்குள் இருந்து இந்தப் புத்தகம் கண்டெடுக்கப் பட்டது.

பின்னர் 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியான தங்கத்துக்கு இப் புத்தகம் ஏலத்தில் விற்கப் பட்டது.

புத்தகத்தை வாங்கியவர் சீலை உடைத்து, புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினர்.

முதல் 99 பக்கங்கள் வெறுமையாக இருந்தன. ஒன்றுமே எழுதப்பட்டு இருக்கவில்லை.

முதல் பக்கத்தில் மட்டும் டாக்டரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப் பட்ட பின்வரும் வாசகம் காணப்பட்டது:

'உங்கள் தலையை Cool ஆக வைத்து இருங்கள் கால்களைச் சூடாக வைத்து இருங்கள். நீங்கள் திறமையான டாக்டராக வருவீர்கள்'—

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

### உயரம் வளரும் மிளகாய்

13 அடி 8 அங்குலங்கள் உயரத்துக்கு மிளகாய்ச் செடி வளர முடியுமா?

முடியும் என்று இந்தியாவில் ஹைதராபாத் என்னுமிடத்தில் நிரூபிக்கப்பட்டது.

1981 இல் ஸ்ரீசடகோபன் நந்தாரியின் மிளகாய்த் தோட்டத்தில் இச் சாதனை ஏற்படுத்தப் பட்டது

## காதலில் தோல்வியுற்றால்

காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருவன் — கலங்குகின்றான் அவளை நெஞ்சில் நிறுத்தி

இது இன்றைய காதலனின் நிலை!

1700 ஆம் ஆண்டுக் காதலன் என்ன செய்தான் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

1700 – 1753 ஆண்டுகளில் மெயின் நாட்டில் ஜோசப்மூடி என்பவர் வாழ்ந்து வந்தார்.

20 ஆவது வயதில் மேரி ஹெர்ஸ்ட் என்ற பெண் மேல் அவருக்குக் காதல் பிறந்தது.

ஆனால் அந்தப் பெண் அவனை மணந்துகொள்ள மறுத்து விட்டாள்.

இதனால் மனம் உடைந்த ஜோசப்மூடி பாதிரியாரானார். அது மட்டுமல்ல முகத்தைக் கறுப்புக் கைக்குட்டையினால் மூடிக் கட்டத் தொடங்கினர்.

காதல் ஏமாற்றத்தினால் பொதுமக்கள் முன்னிலையில் முகத்தைக் காட்ட அவர் விரும்பாததே இதன் காரணம்

இப்படி 32 ஆண்டுகள் கறுப்புக் கைக்குட்டையால் முகத்தை மூடிக் கட்டியபடியே வாழ்ந்து மறைந்தார், வண பிதா ஜோசப் மூடி

## நூறுண்டு வாழ்ந்த டாக்டரின் உணவு

பாண் மட்டும் உண்டு, பால் மட்டும் பருகி எழுபது ஆண்டுகள் உலகில் வாழ்ந்தவர் டாக்டர் ஸ்டீபன் ஸ்மித்.

நாற்பது வயதைத் தாண்டிய பின்னர் இவ்வுணவை அருந்தப் பழகினர்.

இப்படிக் கட்டுப்படுத்தப்பட்ட உணவுடன் கல்வி கற்று டாக்டர் ஆகி சத்திர சிகிச்சை நிபுணராகவும் விளங்கினர்.

இவருடைய முயற்சியால் நியூயோர்க் நகரில் உடல் நல சபை அமைக்கப்பட்டது. சுமார் நூறு ஆண்டுகள் உலகில் உயிர் வாழ்ந்தவர் டாக்டர் ஸ்மித்:

## குடும்பம் சிறக்க சில வழிமுறைகள்

குடும்பம் சிறக்க தம்பதிகள் கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகளை தமிழ்வாணன் கூறுகிறார்.

மனைவிக்கான அறிவுரைகள்:

● கணவரிடம் பழகும் போதும் பேசும் போதும் மிக மிகத் தாராளமாக இருக்கலாம்.

● அந்நியர்களிடம் பேசும் போதும் பழகும் போதும் எண்ணிப் பழக வேண்டும்; எண்ணிப் பேசவேண்டும்.

● இந்த வேறுபாட்டைக் கணவன் கவனிக்கும் போது அவனுக்குப் பெருமையும் அமைதியும் ஏற்படும்.

இன்னும் கடைப்பிடிக்க வேண்டிய ஆறு முறைகள்:–

● மனைவி நாலு பேருக்கு நடுவே கலகல வென்று சிரிக்கக்கூடாது.

● பிறரிடம் கணவனைப் பற்றிக் குறை பேசக் கூடாது.

● அலுவலகத்திலிருந்து கணவன் திரும்பி வரும்போது வீடு பூட்டியிருக்கக் கூடாது.

● மற்றவர்களுக்கு முன்னிலையில் ஆடைகளைச் சரி செய்து கொள்ளக் கூடாது

● ஏதாவது ஒரு பொருளையோ குவளை, தட்டுப் போன்றவைகளையோ பிறருடைய கையில் தன் கை படும்படி கொடுக்கக் கூடாது.

● வெளியூரிலிருந்து தோழி தன் பெயருக்கு கடிதம் எழுதியிருந்தாலும் அதைக் கணவனுக்குக் காட்ட மறக்கக் கூடாது.

கணவனுக்கு சில அறிவுரைகள்:–

● மனதுக்கு கிளர்ச்சியூட்டும் சினிமா, நாடகம் இவைகளுக்கு மனைவியை அழைத்துச் செல்லக் கூடாது.

● முழுக்க முழுக்க காதல் தொடர் புள்ள நாவல்களைப் படிக்கும்படி மனைவியைத் தூண்டக் கூடாது.

● பிறருடைய மனைவியுடன் பேசும்படி நேர்ந்தால் கணவன் தனியாக அவளோடு பேசாமல் நடுவில் தன் மனைவியை வைத்துக் கொண்டு பேச வேண்டும்.

● வருகிற வருவாயையும், செலவிட்ட தற்குச்சரியான கணக்கையும் மனைவியிடம் ஒளிவின்றி உரைத்து விடவேண்டும்.

இருவரும் மனம்விட்டுப் பேச வேண்டும். ஒருவர் உள்ளத்தை இன்னொருவர் நன்கு அறிய நிறைய வாய்ப்புகள் அமையவேண்டும் அடிக்கடி இருவரும் கடற்கரை தோப்பு, ஆற்றங்கரை ஆகிய இடங்களுக்கும் போக வேண்டும்.

ஆண்களை எப்போது தன் வழிக்குத் திருப்பி, உள்ளத்தின் ஆழத்தை அளந்தறியலாம் என்று அறியப் பெண்களுக்குத் தெரியும். அந்தத் தருணம் வரும்போது இருவரும் தெளிவு பெறலாம்.

இருவரும் ஒன்றுபட்டு "ஒற்றுமையில் தான் குடும்பத்தின் வெற்றி இருக்கிறது." என்று உணருவார்களானால் நம்பிக்கையற்ற நிலை அங்கே நிலைக்காது! குலையாத ஒரு குடும்பமாக மாறும் அது

## முதலீட்டு வட்டி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வைப்பாளருக்கு பின்வரும் விவரங்கள் அடங்கிய சான்றிதழை வழங்குவார்கள்

1. மொத்த வட்டி வருமானம்:
2. வரிக்கழிவும் விதமும்:

வரியிறுப்பாளர்கள் இச்சான்றிதழைத் தமது வருமானவரிப் படிவங்களுடன் இணைத்து அவ்வருட வரிக்கொடுப்பனவுகளிலிருந்து ஏற்கனவே செலுத்தப்பட்ட வரியாகக் கழிப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம்.

மொத்த வரியிலும் பார்க்க வரிக்கழிவு கூடுதலாக இருப்பின், மீளளிப்பிற்காக இறைவரித் திணைக்களத்திற்கு இச் சான்றிதழுடன் தம் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டி இருக்கும்.

தாம் வரியிறுப்பாளர் அல்ல என்று வெளிப்படுத்துவோரின் கூற்றுக்களை சரிபார்க்க உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கொம்பியூட்டர் (Computer) உதவியுடன் பின்னர் பரிசீலனை செய்யும்.

வருமானவரி எல்லைக்கு மேற்பட்ட வருமானம் உடையவர்கள் இதுவரை வரியிறுப்பாளராகத் தம்மை பதிவு செய்யாதிருப்பின் அவர்கள் அந்தந்த பிராந்தியத்தில் உள்ள இறைவரித் திணைக்கள பணிமனையில் ஓர் புதிய கோவையை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

இப்புதிய வரிக்கழிப்பு முறை மூலம் 1986 – 87 இற்கு மேலதிக வருமானமாக இருபத்தைந்து கோடி ரூபா பெறப்படும் என்று மதிப்பிட்டுள்ள போதும், இன்னுமோர் வகையான வைப்பாளர்களை இக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தால் இதனிலும் பார்க்கக்கூடிய வருமானம் பெற்றிருக்கலாம்.

### சொற் சிலம்பம்

தவிர்க்கமுடியாத காரணங்களினால் சொற்சிலம்பம் போட்டி இலக்கம்-9 இந்த வாரம் வெளிவரவில்லை. அடுத்த வாரம் அது வெளிவரும். வாசகர்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களுக்கு மனம் வருந்துகிறோம்.

- ஆசிரியர் -

## பார்த்தசாரதியை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவரின் கடைசி துரும்பாக இருந்தது.

"காலையில் காப்பி அருந்தும் சமயம் பத்திரிகையை வாசிக்கின்றேன். அப்போது தான் வெளிநாட்டுக் கொள்கை முடிவுகளை அறிகின்றேன். இந்த நிலையில் தொடர்ந்து பணி புரிவதா?" – இப்படி நெருங்கிய நண்பரிடம் கூறி வருத்தப்பட்டாராம், பார்த்தசாரதி.

கொள்கை வகுக்கும் திட்டக்குழுவின் உறுப்பினர்களாக திரு. ஆர்.என்.காஓ. (RAW ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவர்), திரு. ஏ. கே. தாமோதரன், தலைவராக திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோர் மீண்டும் நியமிக்கப்பட்டது அவர்களுடைய சேவைகளைக் கௌரவப்படுத்தவே ஒழிய, வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப் பட்ட முடிவுகளில் அவர்களுடைய பங்களிப்பைப் பெறுவதற்கு அல்ல என்பதற்கு போதுமான அறிகுறிகள் தென்படுகின்றன.

அவர்களை ஏனோதானோ என்று நடத்தி ஒதுக்கி வைத்தது அரசாங்கம்.

ராஜினமாக் கடிதம் அனுப்புவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் இருந்தே, வெளிநாட்டுக் கொள்கை முடிவுகள் எடுப்பதற்காக திரு. பார்த்தசாரதிக்கு ஒரு "பைலா"வது அனுப்பி வைக்கப்படவில்லை.

இலங்கைப் பிரச்சினையில் இலங்கைப் பிரச்சினை போன்றவற்றில் கூட தொலைபேசியில் கூட திரு. பார்த்தசாரதியின் ஆலோசனை பெறப்படவில்லை. – இப்படி வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசின் வேண்டுகோளின் மீதே இனப்பிரச்சினை சம்பந்தமானபேச்சுகளில் இருந்து திரு. பார்த்தசாரதி அகற்றப்பட்டார்.

ஜெயவர்த்தனவுடனை தொடர்புகளில் ஒதுங்கிக் கொள்ளும் போக்கில் இந்திய அரசு நடந்து கொண்டவிதம் குறித்து பார்த்தசாரதி மகிழ்ச்சி அடையவில்லை என்பது வெளிப்படை.

பலமிக்க நிலையில் இருந்து கொண்டே அயல் நாடுகளுடன் இந்தியா தொடர்புகளை வைக்க வேண்டும் என்பது திரு. பார்த்தசாரதியின் ஆலோசனை. இது பெரும்பாலும் புறக்கணிக்கப் பட்டே வந்தது.

செய்தியின் பின்னணியில்

பார்த்தசாரதியின் ராஜினமாக் கதையை ஆரம்பத்தில் அரசாங்கம் நசுக்கிவிட முயற்சித்தது.

யு. என். ஐ. செய்தி ஸ்தாபனத் தலைவர் திரு. ஜி ஜி மிர்ச்சந்தனிக்கு பிரதமரின் அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்புப் போனது.

ராஜினமாக் கதையை பிரசுரிக்க வேண்டாம் என்பது தான் தொலைபேசி அழைப்பு.

செய்தியைக் கொண்டு வந்தவருடன் தொடர்பு கொண்டு விசாரித்தார்.

ராஜினமாக் கடிதத்தைத் தான் கண்டதாகவும் செய்தி உண்மை என்றும் செய்தியாளர் சொன்னார்.

யு. என் ஐ. தலைவர் உடனே அச் செய்தியை உலகெங்கும் அனுப்ப உத்தரவிட்டதுடன், பிரதமரின் அலுவலகத்துக்கும் அது பற்றி அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து தான் மறுப்பைப் பிரசுரிக்க இன்னொரு செய்தி ஸ்தாபனமான 'பிரிஜ'யை அரசாங்கம் நாடியது.

புதிய வெளிநாட்டு அமைச்சுச் செயலாளர் நியமனத்துடன் பார்த்தசாரதி விவகாரத்தைத் தொடர்புபடுத்துவதே அரசின் எண்ணமாக இருக்கின்றது.

பண்டாரி

வெளிநாட்டுக்கொள்கை வகுக்கும் குழுத் தலைவராக திரு பண்டாரி பதவி ஏற்பார் என்பது ஒரு வதந்தி.

கொள்கை வகுக்கும் திட்டக் குழுவைத்தான் அங்கீகரிக்கமாட்டேன் என்றும் வெளிநாட்டமைச்சு நிர்வாகத்தில் தலையிட்டு இருக்கக்கூடாது என்றும் திரு. பண்டாரி முன்னர் கூறியிருந்தாராம்.

எப்படி இருப்பினும் வெளிநாட்டமைச்சின் ஆலோசகர்களில் ஒருவராக திரு. பண்டாரி இருக்கக்கூடும். இலங்கை இனப் பிரச்சினையில் தீர்வு காணும் முயற்சியில் இந்தியாவின் பிரதிநிதியாக திரு. பண்டாரி தான் ஈடுபடவேண்டும் என்பதில் பிரதமர் மிகுந்த கரிசனை காட்டுகின்றார் என்பதே அதற்குரிய காரணமாகும்.

ராஜினமாவை வாபஸ் வாங்கும்படி பார்த்தசாரதி மீது குறிப்பிடத்தக்க அளவு நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

அரசின் எண்ணம்

அந்த ராஜினமாவால் அரசுக்கு குறைந்த அளவு நட்டம் ஏற்படக்கூடிய காலம் வரும் வரையாவது, ராஜினமாவை வாபஸ் வாங்க வேண்டும் என்பதே அரசின் எண்ணம்.

பண்பான அதிகாரி என்பதால் இந்த வேண்டுகோளுக்கு திரு. பார்த்தசாரதி இணங்கிப் போகக் கூடும்.


### திட்டப் பரிசு

எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருவாய்கள், மாதாந்த அதிர்ஷ்டம், ருதுவானாலும், திருமணமானாலும், பிரசவமானாலும், விபத்தானாலும், அந்திய காலமானாலும் கடன் வசதிகளும், ஏராளமான நன்கொடைகளும் ஒருங்கே அமைந்த திட்டமிது. மேலும் விபரங்களுக்கு பிரதம இயக்குநர், லக்கி பெனிபிட் கோ. லிமிட்டெட்,கோப்பாய்.

### விற்பனைக்கு

புறேயிலர், கல்பேட், சேவல் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு.வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: சீமாட்டி பான்சி, 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலங்காடு, சுன்னுகம்.


## பாலர் பாடல்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

றுமல் ஏன் சில வேளைகளில் மூலத்தையும் விஞ்சி நின்று சிறுவர் பாடல்களை மொழி பெயர்த்து உள்ளார்.

Pussy – Cat, Rain go என்ற பாடல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். மொழிபெயர்ப்பின் திறனைப் பாருங்கள்!

பூனை அண்ணே, பூனை அண்ணே எங்கே போய் வந்தீங்க?

ராணி அம்மாவைப் பார்க்க லண்டனுக்குப் போனேனே!

உன்னுனை லண்டனிலே என்னண்ணே செய்தீங்க?

கண்ணு ஒரு சுண்டெலியைக் கலைச்செல்லோ பார்த்தேனே!

1985 ஆம் ஆண்டு வரை வெளிவந்துள்ள சிறந்த சிறுவர் நூலாக பாவலவன் சத்தியசீலன் எழுதிய பாட்டு என்ற நூல் தெரிவாகியுள்ளது.

யாழ் இலக்கிய வட்டத்தினால் இவ்விருது அவருக்குக் கிடைக்கிறது.

பாவலவனுக்குச் சஞ்சீவியும் தனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறது.

## ஈழவாணன் நினைவுகளை காத்து நிற்போம்

கவிஞர் ஈழவாணனின் இரண்டாவது ஆண்டு நினைவுகள் இந்த மாதத்திலே மீட்டப்படுகின்றன. சின்ன வயதிலேயே காலமாகிவிடும் கலைஞர் பட்டியலில் தன்னையும் சேர்த்துக் கொண்டு 1984ம் ஆண்டு மார்ச் 14 ம் திகதி ஈழவாணன் பேனு ஓய்ந்தது. அன்பு மனைவியையும் மூன்று குழந்தைகளையும் மட்டும் தனித்து விட்டு அவர் செல்லவில்லை.

எழுபதுகளில் 'அக்னி' என்ற கவிதை ஏட்டினை ஈழவாணன் வெளியிட்ட வேளையிலேயே அவருடன் நேரிலே பழகுகின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவருடைய 'அக்கினிப் பூக்கள்' என்ற கவிதைத் தொகுதியை முன்னர் படித்திருந்த போதிலும் நேரிலே அந்தக் கவிஞனைச் சந்தித்த போது மேலும் ஆழமாக அவன் மனித நேயத்தை உணர முடிந்தது.

சின்னஞ்சிறிய அந்த வீட்டிலே, பம்பலப்பிட்டி லொறிஸ் வீதியில் சந்தித்த வேளை அவன் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை நிலை கண்டு என் மனதினுள் சங்கடப்பட்டதுண்டு. ஆனால் இந்த வறுமையோ துன்பங்களோ அவனைச் சோர்வடையச் செய்ய முடியாததைக் கண்டபோது வியந்தேன். தனது வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும், பரந்த தெளிவான தரிசனங்களிலிருந்தும் அவர் பெற்ற உறுதி, அவரது படைப்புகளில் வெளிப் பட்டது.

1974 ஆம் ஆண்டிலே [illegible] இவரது கவிதைத் [illegible] யிருந்தது. தீமை பொசுக்கும் 'அக்னி' மீது இவர் கொண்ட நேசம், அதே 'அக்னி' என்ற பெயரிலேயே ஒரு கவிதை மாத இதழை வெளிக் கொணரவும் வழியாகியது நான் அறிந்தவரையில் ஈழத்திலே நுஃமானின் 'கவிஞனுக்கு'ப் பின் ஈழவாணனின் 'அக்னி'யே முழுக்க முழுக்க கவிதைக்கென ஈழத்தில் வெளியாகிய ஏடு எனலாம்.

'பிரபஞ்ச வீதியில் சமுதாய கூரை முகடுகளை உலுப்பிவிடும் கொடுமைகளைக் காணும்போது எங்கள் ஆவேசம் கவிதையாகின்றது. புனருத்தாரணத்துக்காகவன்றி புது யுகத்திற்காகவே நாங்கள் எழுதுகின்றோம்' என்ற முன்வைப்புடன் வெளியாகிய 'அக்னி' ஐந்து இதழ்களுடன் அணைந்து போனது துரதிஷ்டவசமானது. 'நவீனத்துவத்தை ஆகர்ஷிக்கும் அதே வேளையில், நாங்கள் உத்திகளுக்காக எழுதுபவர்கள் அல்ல' என்ற தெளிவுடன் இலக்கியம் படைத்தவர் ஈழவாணன்.

தாம் வாழ்ந்தகாலத்து இந்திய இலக்கியப்பரப்பிலும், சர்வதேச மட்டத்திலும் வளர்ச்சி கண்டிருந்த கவிதை இலக்கிய போக்குகளை அறிந்திருந்தமை ஈழவாணனின் பலங்களின் அடிப்படை எனலாம். இவ்வாறன கவிதை இயக்கங்களுடன் நேரடியான சில தொடர்புகளையும் கொண்டிருந்த ஈழவாணன், இன் [illegible] பாளிகள் பலருக்கும் அவர்களை அறிமுகம் செய்து வைப்பதில் கொண்டிருந்த ஆர்வமும் இங்கு நினைக்கப்பட வேண்டியது. நேரடியாக மட்டுமன்றி வானொலிப் பேச்சுக்கள், பத்திரிகைக் கட்டுரைகள் மூலமாகவும் இவை இலக்கிய நெஞ்சங்களைச் சேர்ந்தன. எடுத்துக்காட்டாக ஆந்திராவின் திகம்பரக் கவிகள் பற்றி நம்மவர்களில் பலர் அறிந்து கொண்டது தர்மராஜா எனப்பட்ட ஈழவாணன் மூலமாகவே என்றாலும் தவறில்லைத்தான்.

என்னைப் பொறுத்தவரையில் ஆபிரிக்க கவிதைகளில் ஈடுபாடு கொள்ளுதலிலும் அவற்றினைத் தமிழில் வடித்தெடுக்கும் முயற்சியில் இன்றும் தொடர்ந்து சில வெற்றிகளைக் காணுவதிலும் ஈழவாணன் ஊட்டிய ஊக்கம் மறக்க முடியாதது

பென்டன் காமிக்கேல், அஞ்சலா டேவிட், மல்கம் எக்ஸ் போன்றோர் இருண்டமக்களின் ஆத்மராகங்களாக மட்டுமன்றி அவர்களது ஆவேசக்குரலுமானமையை ஈழவாணன் சுட்டுவார் 'இன்று அவர்கள் போராட்டம் வர்க்கரீதியான போராட்ட முனைப் பாகி வருவதனை வைகறைப் பொழுதின் உதய கதிர்களை வரவேற்பதாகும்' என்றும் மகிழ்ந்து நிற்பார்.

ஈழவாணனின் இந்தத் தரிசனம் நமது இன்றைய கவிஞர்களுக்கு அவசியம். இந்தத் தரிசனத்தில் ஈழவாணனின் நினைவுகளைக் காத்து நிற்போம்.

நினைத்துப் பார்ப்பவர்:

**என். சண்முகலிங்கன்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.


# தேவை

(1) மெசின் மைன்டர் (Mechine Minder)

(2) கொம்பஷிட்டர் (Compositor)

(3) டிலிவரி பையன்கள் (Delivery Boys)

மிகவும் பிரபல்யம் வாய்ந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தொடங்க இருக்கும் புதிய புதினப் பத்திரிகை ஸ்தாபனத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தெரிவுக் குழு,
106, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கட்டுப்பணம் கட்டக்கூடியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

## நபீஸா ஜுவல்லர்ஸ்

ஸ்தாபனத்தார்.

எமது இரண்டாவது வருட பூர்த்தி விழாவிற்கு

பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும் தெரிவித்த ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு

நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நபீஸா

## ஜுவல்லர்ஸ்

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தூய்மையான 22 Ct.(கரட்) தங்க நகைகளை ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும், பழைய பவுண் நகைகளை கூடிய விலைக்கு விற்றுப் பணம் பெறவும், நவீன டிசைன்களில் அமைந்த புதிய நகைகளை உடன் பெறவும், எழில் நங்கையர் விரும்பும் நவீன வேலைப்பாடமைந்த கால் சங்கிலிகளைப் பெற்றுக்கொள்ளவும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

நபீஸா ஜுவல்லர்ஸ்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

BRIGHT TUITION CENTRE
செம்பியன் லேன் - கொக்குவில்.
O/L விஞ்ஞானம்
ஆசிரியர்:
J. R. சூரி
நேர அட்டவணை: திங்கள் — மாலை 4 மணி
வெள்ளி— மாலை 4 மணி
ஞாயிறு — பகல் 1 மணி

சஞ்சீவி
22 03.1986 சனிக்கிழமை

BOND INSTITUTES
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
O/L விஞ்ஞானம்
ஆசிரியர்கள்
MR. BOND
MR. J. R. SOORI
நேர அட்டவணை: திங்கள், செவ்வாய்,
வெள்ளி பி.ப. 2.30 மணி.

# இந்துமா கடலில் இராணுவ சூறுவளி 'கருக் கட்டுமா?'

பார்த்தசாரதி, பண்டாரி, வெங்கடேஸ்வரன்— இம்மூன்று 'ராஜதந்திரக் கோள்களும்' சித்திரையில் ஒன்று சேர்ந்து இயங்கப் போகின்றனர் என்று அரசியல் சோதிடர்கள் ஆருடம் கூறுகின்றனர்.

தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஒன்று இந்திய அரசினால் அமைக்கப்படவிருப்பதாகச் செய்தி.

திரு. பார்த்தசாரதி. இக்கவுன்ஸிலின் தலைவராகப் பதவி ஏற்பார் என்பது இன்னொரு தகவல்.

இந்துமாகடல் பாதுகாப்புப் பொறுப்பு இக்கவுன்ஸிலிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. இதற்குக் கட்டியம் கூறுவது போல் அமைந்துள்ளது. கடந்த வியாழன் இந்திய நாடாளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் பலிராம் பகத் பேசிய பேச்சு

கராச்சியில் அமெரிக்க யுத்தக்கப்பல்கள்; கொழும்பில் பாகிஸ்தான் யுத்தக்கப்பல்கள். இவை கவலை தரும் நிகழ்வுகள் —இப்படி இந்தியா கூறுகிறது.

இது 'முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப்போடும்' கதை என்று இலங்கை கூறக் கூடும்.

ஆனால் வளர்ந்துவரும் பாகிஸ்தான் - இலங்கை இராணுவ உறவுகள் குறித்து திட்ட வட்டமான சாட்சியங்கள் இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையை 'மைய'மாக வைத்து இராணுவச் 'சூறாவளி' ஒன்று உருவெடுக்கக்கூடிய சாத்தியம் தெரிகிறது.

அவ்வாறு 'மையம்' கொண்டால் பின்னர் அது எங்கு, எப்படி நகரும் என்பது இப்போதைக்குச் சொல்ல முடியாத ஒரு விஷயம்.

நடப்பவற்றை வைத்துத்தான் பலனைச் சொல்லமுடியும். இப்படி அரசியல் சோதிடர்கள் கணிக்கிறார்கள்.

இலங்கை வங்செயல்களில் இனக்கொலைச் சாயல் தெரிகிறது என்று அமைச்சர் பலிராம் பகத் முன்னர் சொல்லப்போய் ஒரு பூசம்பமே 'வெடித்தது!'

இப்போது யுத்தக் கப்பல்கள் கொழும்பு வந்த விஷயம் பற்றி அமைச்சர் பலிராம் பகத் பேசியிருக்கின்றார்.

இப்பேச்சுக்கு இலங்கை அரசு நிச்சயமாக 'பலேராம்' என்று சொல்லப் போவது இல்லை. ஆனால் இலங்கை அரசு, இனப்பிரச்சினை சம்பந்தமாக இனிக் கடைப்பிடிக்கப் போகும் அணுகுமுறைகள்தான் இந்துமா கடலில் 'மையம்' கொள்ளக் கூடிய சூறுவளியின் திசையை நிர்ணயிப்பதாக இருக்க முடியும்.

இப்படி அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## உள்ளும் புறமும்

குறுமுனி

## 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை'

கொழும்பில் ஒரு பாடசாலை நடத்தப்படுகிறது. எப்படிப் பண்பாகப் பேசுவது என்பதைச் சொல்லிக் கொடுக்கும் பாடசாலை அது.

கடந்த வாரம் அந்தப் பாடசாலை விழாவிலே ஜனாதிபதி ஜெயவர்த்தன பேசினார்.

பல இனமக்கள் வாழும் நாட்டிலே மற்றவர் மனதைப் புண்படுத்தாமல் பேசப் பழகிக் கொள்ள வேண்டும்.

இப்படி திரு. ஜெயவர்த்தன பேசினார்.

திரு.ஜெயவர்த்தனவா இப்படிப் பேசினார்? இப்படிப் பலர் மனதில் சந்தேகம்.

1977 இல் பொதுத் தேர்தல் முடிந்தது. அதன் பின்னர் சில தினங்கள் கழிந்து இனக்கலவரம் நாட்டில் வெடித்தது.

அந்த இக்கட்டான காலத்தில் ஒரு நாள் இரவு 9 மணியளவில் வானொலியில் ஒரு பேச்சு ஒலிபரப்பானது.

''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' — இப்படி முழக்கம் இட்டார் திரு. ஜெயவர்த்தன, பிரதமர் பதவியில் இருந்து கொண்டு.

அந்தப் பேச்சைத் தொடர்ந்து இனக்கலவரம் அதிகரித்தது. பல தமிழர் கொலையுண்டனர். தமிழர் வீடுகள் எரிக்கப்பட்டன.

இன்னொரு நிகழ்ச்சி. 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நடந்தது.

தேர்தல் பிரசாரத்தை திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அங்குரார்ப்பணஞ் செய்தது.

அதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தன மூதூர், சேருவில் தொகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் வரும் முன்னரே சிங்களவர் வாழ்ந்து கொண்டிருந்தவர் தமிழர் மீன் பிடிக்கத்தான் திருமலை வந்து குடியேறினர் — இப்படி சேருவில கூட்டத்திலே திரு.ஜெயவர்த்தன பேசினார்.

1983 க்குப் பின்னர் தான் இலங்கை இனப் பிரச்சினை சூடு பிடிக்கத் தொடங்கியது திரு.ஜெயவர்த்தனவை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டு வந்தனர்.

அச்சமயம் 'இந்டியா ருடே' சஞ்சிகைக்கு திரு. ஜெயவர்த்தன பேட்டி ஒன்றை அளித்திருந்தார்.

''இந்தியா ஆக்கிரமித்தால் அது இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு முடிவாகத்தான் அமையும்''— இப்படி திரு. ஜெயவர்த்தன அந்தப் பேட்டியிலே கூறியிருந்தார்.

டாக்காவில் வைத்துத் தான் 1985 இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளை பிரதமர் ராஜீவ் காந்தி, திரு. ஜெயவர்த்தனவிடம் நேரடியாகக் கையளித்து இருந்தார்.

அதை வாங்கிக் கொண்டு விமானத்தில் வருகையில் திரு. ஜெயவர்த்தன கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்குப் பேட்டி அளித்தார்.

''தமிழருக்குப் பிரச்சினைகளா? எல்லாவற்றையும் தீர்த்து வைத்து விட்டோமே! வேறு என்ன பிரச்சினைகள் தமிழருக்கு உண்டு? திரு அமிர்தலிங்கம் கூறட்டும்'' இப்படி மிடுக்காக பேட்டியில் திரு. ஜெயவர்த்தன கூறியிருந்தார்.

இப்படி எல்லாம்பேசியவரா கடந்த வாரம் அப்படிப் பேசினார்?

'பேச்சுப்பல்லக்கு,தம்பி கால் நடை'என்பது தெரியாததா?

## புத்தர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லை.

பொறுமையற்ற, உணர்ச்சிபூர்வமான போக்கை இந்தியா கடைப்பிடித்தால் நல்ல பயன் விளையாது.

இலங்கை நிலை திருப்திகரமானதாக இல்லை. இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்றாலும் இந்தியா பாதிக்கப்படுகின்றது. அத்துடன் எமது பிராந்தியமும் பாதிக்கப்படுகின்றது.

இந்தியாவிற்கு ஆத்திரமூட்டும் செயல்கள் இடம் பெறுகின்றன ஆனால் நிதானத்தை இந்தியா கடைப்பிடித்துவருகிறது

இப்படி இணை அமைச்சர் சொன்னார்.

பங்களாதேஷ் பிரச்சினையில் காட்டிய மெய்யார்வத்தை இலங்கைப் பிரச்சினையிலும் இந்தியா கடைப்பிடிக்க வேண்டும்—என்று உறுப்பினர்கள் இந்திய அரசைக் கேட்டுக் கொண்டனர்.

## நெடுங்கேணி...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

றனர்.

ஒரு பெண் உட்பட வயோதிபர்களின் சடலங்களை விட்டுச் செல்லப் பட்டவை என்று சொல்லப் படுகிறது.

## நீத்தார் பட்டியல்

### திருமதி கனகசபாபதி ஜீவரெட்டிணம் (இராஜேஸ்வரி)

வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி ஜீவரெட்டிணம் (இராஜேஸ்வரி) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற S. P. இராசையா. நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், M. S. கனகசபாபதியின் அன்பு மனைவியும், சிவகுமாரி, சைலகுமாரி, ஹரிச்சந்திரா, பிரேமச்சந்திரா, (லங்கா சிமெந்து லிமிடெட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. V. சசிதரன், R. S. விசாகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருஷனின் பேத்தியுமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

15, ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 22-03-1986

## செய்திக் கொத்து

மார்ச் 15 - 21

வெள்ளி:

- இலங்கை இராணுவ உதவி பெறுவதைத் தடுக்கவும்; 11 எதிர்க்கட்சிகள் இந்திய அரசிடம் கோரிக்கை
- பண்டிதமணியின் பூதவுடல் தகனம்.

சனி:

- இடைக்கால யுத்த நிறுத்தம்:: போராளிகள் நிராகரிப்பு.
- யாழ்தேவி பரந்தனில் தடம்புரண்டது;

ஞாயிறு:

- தமிழ் அகதிகள் தலைமன்னார் வரவில்லை.
- வவுனியா விஹாரத்தால்; சிப்பாய் சுட்டு 2 பேர் பலி. வட்டக்கச்சியில் 4 பேர் பலி.

திங்கள்:

- கண்காணிப்புக் குழு அழைப்பை யாழ் பிரஜைகள்குழு நிராகரித்தது.
- அடகு வைத்தோர் மக்கள் வங்கி முன் மறியல்.
- 5 முஸ்லிம்கள் சுட்டுக்கொலை; மூதூரில் சம்பவம்.

செவ்வாய்:

- வடபகுதிக்கு 'பொருள்களுடன்' 2 கப்பல்கள்.
- பாக் — இலங்கை இராணுவ உறவு அதிகரிப்பு; இந்தியா கவலை.

புதன்:

- மீன்பிடித்தடையை எதிர்த்து மீனவர் பேரணி நடத்தினர்.
- ராஜீவ் காந்தியை இலங்கைத் தூதர் சந்தித்தார்.
- தமிழக அரசு இலங்கைப் பிரச்சினை பற்றி மத்திய அரசிடம் மீண்டும் விளக்கும்; நெடுஞ்செழியன் அறிவிப்பு

வியாழன்:

- போராளிகள் பெரும் தாக்குதலுக்கு தயார்; இலங்கை அமைச்சர் அறிவிப்பு.
- நெடுங்கேணியில் 25 தமிழர் வரையில் சுட்டும், எரித்தும் கொலை.

## குடாநாட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் சீருடையினர் கவச வாகனங்கள் சகிதம் தொலைத் தொடர்பு நிலைக்களத்தின் ஊடாக கொட்டடிப் பக்கமாக வெளியே வந்தனர்.

அப்போது போராளிகள் கைக்குண்டுகளை வீசி வெடிக்க வைத்தனர்.

படையினர் கைக்குண்டு வெடித்த இடத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

யாழ் கோட்டை முகாமிலிருந்து 'ஷெல்' குண்டுகள் அடுத்தடுத்து தீர்க்கப்பட்டன.

ஐந்து தடவைகள் ஏவப்பட்ட ஷெல் குண்டுகளினால் நான்கு வீடுகள் சேதமடைந்தன

இரண்டு வீடுகள் தீப் பற்றி எரிந்தன.

காரொன்றும் இச் சம்பவத்தினால் சேதமடைந்தது.

நேற்றைய சம்பவத்தில் காயமடைந்த 22 பேரில் 15 பேர் பெண்கள்:

இந்தச் சம்பவத்தில் இறந்த இரண்டு பேரின் விவரம் வருமாறு:-

1. சேனாதிராசா பிரேமதரா 18 வயது. பாடசாலை மாணவி.

2. ரகுநாதன் சிவகுமார். ஒன்றரை வயது.

இச் சம்பவங்களினால் யாழ்நகர் நேற்று அல்லோலகல்லோலப் பட்டது. கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன.

# நற்சிந்தனை விளக்கிய சிவயோக சுவாமிகள்

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

மாவிட்டபுரத்தில் வாழ்ந்த அம்பலவாணரும் அவர் தம் அருமைப் பத்தினி அமுதமும் செய்த அருந்தவப் பேற்றினால் 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 3 - 30 மணியளவில் அவிட்ட நட்சத்திரத்தில், ஒரு சற்புத்திரர் பிறந்தார்.

அவருக்குச் சதாசிவன் என்று நாமம் சூட்டினர் பெற்றோர். சுவாமிகளின் பிள்ளைப் பெயர் யோகநாதன் என்று கூறுவாருமுளர்.

ஆனால் யோக நெறியில் முதிர்ந்த பின்னர்தான் இவருக்கு இப் பெயர் ஏற்பட்டது எனலாம். கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து கல்வி கற்றதனால் இவருக்கு யோன் என்னும் பெயரைக் கொடுத்தனர்.

கத்தோலிக்க சூழலிலிருந்து சைவப்பற்றுக்கு இவரை மாற்றிய பெருமை இவரது மாமியாரான முத்துப்பிள்ளையையே சாரும்.

வச்சிர தேகமும், வசீகரிக்கும் தோற்றமும் உடையவராய், வெண்ணிற ஆடையில் விளங்கிய சுவாமிகள், தன்னை வந்தடைந்தோர்க்கு, வாரி வழங்கிய போதனைகள் அவர்களது வாதனையையும் வேதனையையும் விலக்கி விளைவித்த சுகம் அதிகம்.

இதனால் சுவாமிகளிடம் பக்திபூண்ட அடியார்கள் அதிகம். அவர்

### குருபூசை இன்று

எம்மத்தியில் வாழ்ந்த சித்தர்.

இவரின் குருவாக விளங்கியவர் செல்லப்பா சுவாமிகள் ஆவார்.

நல்லூர் கந்தனலயத் தேரடியில் குந்தியிருந்து செல்லப்பாச் சுவாமிகள் பெருக்கிய ஞான வெள்ளத்துள் மூழ்கி, அவரின் திருவாக்கிற் பிறந்த நான்கு மகா வாக்கியங்களைக் கேட்டு உய்தி பெற்றவர் யோகசுவாமிகள்.

தாம் கேட்ட நான்கு வாக்கியங்களான, ''ஒரு பொல்லாப்புமில்லை'', ''எப்பவோ முடிந்த காரியம்'', ''நாமறியோம்'', ''முழுதும் உண்மை'' என்னும் முடிந்த முடிவுகளை வைத்து நற்சிந்தனை என்னும் தலைப்பில் ஞானக் கருத்துக்களை நாடடவர்களுக்கு நல்கிய ஞானசிரியர் யோக சுவாமிகள்.

தனித்திருந்து, தபசு மேற்கொண்டு தன்னலம் கருதாமல், எல்லோரும் காண வெளிவந்து, எங்கும் உலவி, எல்லோரையும் கூவியழைத்து, அவரவர் பக்குவமறிந்து அவரவர்க்குரியதாக உபதேசம் வழங்கிய தவசிரேட்டர் யோக சுவாமிகள். அவரின் ஞாபகார்த்தமாக விளங்குவது, தலங்குவது சிவதொண்டன் நிலையம்.

எட்டாம் வகுப்புடன் ஏட்டுக் கல்வியை நிறுத்திக் கொண்ட சுவாமிகள், முதலில் மஸ்கெலியாவில் தோட்டத்திலும் பின்னர் கிளிநொச்சியில் நீர்ப்பாசனப் பகுதியிலும் வேலை பார்த்தார்.

நீர்ப்பாசனப் பகுதியில் பொருள் காப்பாளராக இருந்த இவர் அருள்மிக்கவராக மாறியது ஓர் அதிசயமே. இக்காலத்தில் தான் இவருக்கு ஞான நிலை, விசர்ப் போக்கு ஏற்பட்டது.

மேல் நாட்டு பக்தர்களும் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

ஜேர்மனியைச் சேர்ந்த கௌரிபால என்பவரும் சோல்பரிப்பிரபுவின் மகனைராம்ஸ்போதமும் இவருடைய சீடர்களே.

சுவாமிகளுடைய நற்சிந்தனை மேல்நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது இவரது புகழ் உலகளாவியது என்பதை உணர்த்தும்.

''சும்மா இருக்கின்ற சுகம்'' பெரிது என்றார் தாயுமானார்.

சுவாமிகள் ''சும்மா இரு'' என்றே சோல்பரிப்பிரபுவின் மானுக்கு உபதேசம் செய்தார்,

எம்மால் முடியாவிட்டாலும் சும்மா இருக்கின்ற நிலை ஏற்பட்டால் இம்மாநிலத்தில் அம்மா இவர் நிலை பெரிது எனும் நிலை பெறலாம்.

# சோஷலிச ஜனதிபதி வலதுசாரிப் பிரதமர்

## பிரெஞ்சு அரசியல் நெருக்கடி

### இலங்கைக்கு முன் எச்சரிக்கையோ?

பிரான்ஸில் நேற்று முன் தினம் அதாவது வியாழக்கிழமை ஜாக்கியூஸ் சைரக் பிரதமர் பதவி ஏற்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இவரின் தலைமையின் கீழ் போட்டியிட்ட வலதுசாரிக் கூட்டணி வெற்றியீட்டியது. ஜனாதிபதி மிட்டர்ரண்டின் சோஷலிச கட்சியினர் தோல்வி அடைந்தனர்.

ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் இந்த நிலை மாறிவிட்டது.

மிட்டர்ரண்டின் பதவிக் காலம் 1988 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. இலங்கையைப் போன்று பிரான்ஸிலும் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஏழு வருடங்கள் தான்.

அடுத்த இரண்டு வருடங்களையும் சோஷலிச ஜனாதிபதியும் வலதுசாரி நாடாளுமன்றத்தினரும் தனியாரின் ஆதிக்கம் குறைக்கப்பட்டு தேசிய மயக்கொள்கைகள் அமுல் செய்யப்பட்டன.

ஆனால் வேலை இல்லாத் திண்டாட்டம் முன் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருந்தது.

கடந்த ஞாயிறு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ள வலதுசாரி டிகோலிஸ்ட் வாதிகள் தேசிய மயக்கொள்கைகளை வன்மையாக

## உலக உலா

ஏன்.பி.சீலன்

வலதுசாரிகள் நாடாளுமன்றத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றியதை அடுத்து, பிரான்ஸில் அரசியல் நெருக்கடி உருவாகக்கூடிய அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

பிரான்ஸில் தற்போது ஜனாதிபதியாக இருப்பவர் பிராங்கொய்ஸ் மிட்டர்ரண்ட். இவர் ஒரு சோஷலிசவாதி. தற்போது தேர்தலில் வெற்றியீட்டி உள்ள வலதுசாரிக் கட்சிகளின் கொள்கைகளில் இருந்து பெரிதும் வேறுபட்டவர்.

1981 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வலதுசாரிகளான டிகோலிஸ்ட் வாதிகளைத் தோற்கடித்து இவர் ஜனாதிபதியானார். அப்பொழுது பிரெஞ்சு நாடாளுமன்றத்திலும் இவரது கட்சியே பெரும்பான்மை பலத்துடன் இருந்ததால் பிரச்சினை இன்றி ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

எப்படி இழுக்கப் போகின்றனர் என்பதே இன்றுள்ள பிரச்சினை ஆகும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பிரான்ஸில் நீண்ட காலம் அரசியல் ஸ்திரமின்மை இருந்து வந்தது. அடிக்கடி அரசாங்கங்கள் கவிழ்ந்து வந்தன.

சார்ள்ஸ் டிகோல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதுடன் இதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

டிகோலுக்குப் பின்னர் பிரசித்தி பெற்ற ஜனாதிபதியாகக் கருதப்படுபவர் பிராங்கொய்ஸ் மிட்டர்ரண்ட்.

தொழிற்சாலைகள் நிறைந்த நகரப் பகுதிகளில் இவரது சோஷலிஸ்ட் கட்சி அமோக ஆதரவைப் பெற்றிருந்தது.

மிட்டர்ரண்டின் கடந்த 5 வருட பதவிக் காலத்தில் பிரான்ஸில் பணவீக்கம் பெரும் அளவு குறைந்திருந்தது.

தொழிற்றுறைகளில் எதிர்ப்பவர்கள்.

மிட்டர்ரண்டின் கொள்கையுடன் ஒத்துப்போகக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை.

நாடாளுமன்றம் நிறைவேற்றும் தீர்மானங்களை ஜனாதிபதி தூக்கி எறியும் கட்டம் ஏற்படும்போது தான் பிரெஞ்சு அரசமைப்பில் உள்ள 'ஓட்டை உடைசல்' தெரியவரும்.

இலங்கை அரசமைப்பும் ஓரளவுக்கு பிரெஞ்சு அரசமைப்பை ஒத்ததே. பிரான்ஸிலும் விகிதாசார முறைப்படியே தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஜனாதிபதி ஒரு கட்சிக்காரராகவும் பிரதமர் மற்றொரு கட்சிக்காரராகவும் வரக்கூடிய நிலைமையை இந்த அரசமைப்புக் கொண்டிருக்கிறது.

பிரெஞ்சு நெருக்கடி பிரெஞ்சு அரசமைப்பைப் பின்பற்றும் நாடுகளுக்கு ஒரு முன் எச்சரிக்கையோ?

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் 3ஆவது டெஸ்ட்

## பாகிஸ்தான் -- இலங்கை அணிகள் மோதும்

கொழும்பு, மார்ச் 22 பலத்த பாதுகாப்பின் மத்தியில் இலங்கை—பாகிஸ்தான் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதனிடையில் இலங்கை—பாகிஸ்தான் கிரிக்கெட் தகராறை ஆராய பாகிஸ்தான் கிரிக்கெட் கழகம் விசேட அதிகாரி ஒருவரை அனுப்பியுள்ளது.

ஜனப் எம். இஜ்ஜாஸ் பட் என்ற அந்த அதிகாரி கடந்த புதன்கிழமை இலங்கை வந்தார்.

மத்தியஸ்தர்கள் பற்றி பாகிஸ்தான் வீரர்கள் குறை கூறினர். விளையாட்டை இடையில் கைவிடும் அளவுக்கு பாகிஸ்தான் - இலங்கை கிரிக்கெட் தகராறு முற்றியது.

பிறகு பாகிஸ்தான் தூதுவர், இலங்கை கிரிக்கெட் சபைத்தலைவர் திரு. காமினி திஸநாயக்க ஆகியோருக்கு இடையில் நடந்த பேச்சுக்களைத் தொடர்ந்து இரண்டாவது டெஸ்ட் விளையாடப்பட்டது.

## ஆயுதப்..

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. தஸநாயக்கா கேட்டார்.

தோட்டத் தொழிலாளர் பயங்கர ஆயுதம் வைத்துள்ளனர். ஆனால் மலையகச் சிங்களவரிடமோ பழைய துவக்குக் கூட இல்லை.

இப்படிக் கவ[illegible] வித்தார். திரு. தஸநாயக்க.

## அரியாலையிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

ஷெல் குண்டு தாக்குதலைத் தொடர்ந்து நேற்று இந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

1. பொன்னுத்துரை பத்மராசா 33 வயது.

2. குசைப்பிள்ளை சுவாம்பிள்ளை 26 வயது. இவருக்கு காலில் கையில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

3. சுப்பிரமணியம் புஷ்பராணி 29 வயது.

4. கனகலிங்கம் இஷோ [illegible] வயது.

5. வைத்தியலிங்கம் [illegible] வயது. இவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

## காவலூரிலும்...,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

இதனையடுத்து போராளிகள் அவர்களை எதிர்த்து மோட்டார் ஷெல் குண்டுகளை ஏவினர்.

சீருடையினரும் பதில் தாக்குதல்களில் ஈடுபட்டார்கள். சுமார் இரண்டு [illegible] நடைபெற்ற இத்தாக்குதல்களினால் ஐந்து பொது மக்கள் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org